RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 9 • இதழ் 12 • ஜூன் 2025 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

## எண்ணங்கள்



# வெற்றி

## சிறப்பிதழ்

RAMRAJ
COTTON
WHITE SHIRTS

# தோற்றத்தை மாற்றிடும் பாரம்பரியத்தின் பொலிவு.

எல்லாவித சீதோஷணம்
மற்றும் இன்றைய
ஸ்டைலுக்கு ஏற்ப
தயாரிக்கப்பட்ட
ராம்ராஜ் 100%
தூய காட்டன் சர்ட்டுகள்,
எளிமையின் அழகும்,
பாரம்பரியத்தின்
பொலிவும் கொண்டது.



**Available at Ramraj Showrooms and All Leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in**

RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

வெற்றியை அடைவதற்கான ரகசியங்களைத் தேடி அறிந்து
உழைப்பாலும் முயற்சியாலும் வென்றெடுக்கும் திறன் பெற்று
முழுமையான வெற்றியாளராக வாழ்வதற்கு வழிகள் சொல்லும்

# வெற்றி
## சிறப்பிதழ்

என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.



# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

'அமைதியான கடல் திறமையான மாலுமியை உருவாக்குவதில்லை' எனும் கருத்து, வெற்றியைத் துரத்திக் கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் பொருந்தும். பலரும் வாழ்வில் பெரிய வெற்றியைப் பெறவேண்டும் என்கிற கனவோடுதான் ஒவ்வொரு நாளையும் எதிர்கொள்கிறார்கள். 'பெரிய வெற்றி என்பது சிறு சிறு வெற்றிகளின் தொகுப்பு' என்பதை உணர்ந்தவர்கள் பெரிய வெற்றிகளைப் பெறமுடிகிறது. வெற்றியின் அளவும், எது வெற்றி என்கிற புரிதலும் வந்துவிட்டால் வாழ்க்கை இனிமையாகிவிடுகிறது.

வெற்றி என்பது பரிசு அல்ல. திறமையைப் பயன்படுத்தி, பலமுறை முயன்று, கடுமையாக உழைத்துப் பெறக்கூடிய பலன். அதிர்ஷ்டத்தால் ஒருவேளை வெற்றி கிடைத்தாலும், திறமையை வளர்த்துக்கொண்டால் மட்டுமே அது நிலைத்து நிற்கும். முயற்சியை எப்போதும் கைவிடாமல் இருக்க வேண்டும். உழைப்பதற்கு விருப்பத்துடன் இருக்க வேண்டும். அதனால்தான், 'வெற்றி என்பது இலக்கை அடைவது மட்டும் அல்ல, அது தொடர வேண்டிய பயணம்' என்றனர். கட்டுச்சோறு நீண்ட பயணத்திற்கு உதவாது, நமக்கான உணவை நாமே தேடத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

ஒரு விளையாட்டு வீரர் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வாங்குகிறார் என்றால், அந்த வரலாற்று வெற்றி ஒரு நாளில் கிடைத்தது இல்லை. ஒரு வீரர் ஒலிம்பிக் மைதானம் வரை வந்து சேர்வதற்கே, ஓட்டத்தின் மீது தணியாத ஆர்வமும், இடைவிடாத பயிற்சியும், ஒவ்வொரு இலக்காக முன்னேறிப் போகிற தீவிர முயற்சியும் அவசியம். ஒரு போட்டியில் ஒலிம்பிக் மைதானத்தில் ஒருமுறை மட்டுமே ஓடும் வாய்ப்புக் கிடைக்கிறது. அந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்த, அவர் தினம் தினம் ஏதோ ஒரு மைதானத்தில் ஓட வேண்டும். இலக்கு நிர்ணயம் செய்து, அதை அடையமுடியாமல் தோற்று, மீண்டும் எழுந்து ஓடவேண்டும்.

பயிற்சி செய்யும் மைதானத்தில் ஏற்படும் சிறுசிறு தோல்விகளை ஆராய்ந்து, அவற்றைச் சரிசெய்து, அதைச் சிறுசிறு வெற்றிகளாக மாற்றி இலக்கைப் பெரிதாக்கித் தினம் தினம் முன்னேறுகிற வீரனோ, வீராங்கனையோதான் ஒலிம்பிக் மைதானத்தில் நடைபெறும் போட்டியில் கலந்துகொள்ள முடியும். இவ்வளவு முயற்சியும் பயிற்சியும் செய்த பிறகும், அந்த மைதானத்தில் நிற்கும் எல்லா



வீரர்களுக்கும் பதக்கம் கிடைத்துவிடாது. வாய்ப்பைத் தவறவிட்டவர்கள் சோர்ந்து விடாமல், தங்கள் தவறுகளை ஆராய்ந்து சரிசெய்துகொண்டு, மீண்டும் பயிற்சி மைதானத்தில் ஓட்டத்தைத் தொடங்க வேண்டும்.

இது விளையாட்டு வீரர்களுக்கு மட்டுமானது அல்ல! வெற்றியை அடையக் கனவு காணும் அனைவருக்கும் இதுவே வழிமுறை. பணம் சேர்ப்பது, புகழ் பெறுவது, பதவிகளை அடைவது போன்றவற்றை வெற்றி எனப் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவையெல்லாம் வெற்றியின் ஓர் அங்கம் மட்டுமே. ஒருவர் தான் எடுத்துக்கொண்ட வேலையில் காட்டும் அர்ப்பணிப்பு, முயற்சி, உறுதி போன்ற பல முக்கிய அம்சங்களின் தொகுப்பே வெற்றி. நாம் ஏற்றுக்கொண்ட பொறுப்புகளில் நம் பங்களிப்பு என்பதே வெற்றியின் அளவுகோல். அதுவே நிறைவைத் தரும். உண்மையான வெற்றியின் அர்த்தம் புரியும்போது மட்டுமே நிலைத்த, நீடித்த வெற்றிகளைக் குவிக்க முடியும்.

ஒருவர் இரவு பகலாகக் கடினமாக உழைத்து 20 உணவகங்கள் திறந்துவிட்டார். அவரிடம் ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். அவர் நிறுவனம் தயாரிக்கும் ருசியான உணவைப் பல ஆயிரம் பேர் தினமும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். ஆனால் கடும் உழைப்பில் வெற்றி பெற்ற அந்த நபர், தன் உடல்நலனைச் சரியாகப் பராமரிக்காமல் நோய்வாய்ப்படுகிறார் எனில், அவர் அதுவரை உழைத்துப் பெற்ற வெற்றி கண் முன்னால் கரைந்துபோகும். அதனால்தான் உடல்நலனும் மனநலனும் வெற்றியின் முக்கிய அங்கமாகிறது. வெற்றியைத் துரத்தும் பலரும் எளிதில் மறந்துவிடுகிற உண்மை இது. எந்தத் துறையில் வெற்றியடைய நினைத்தாலும், உடலுக்கும் மனதிற்கும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கத் தெரிந்தவர்கள் நிலைத்த வெற்றியைப் பெறுகிறார்கள்.

அதேபோல, தோல்வியும் வெற்றியின் மிக முக்கியமான அங்கம். தோல்விகள் இல்லாத பெரிய வெற்றிகளைக் கதைகளில்கூடக் காணமுடியாது. நாம் கற்பனையாகக் கேட்கிற கதைகளில்கூடக் கதையின் நாயகனோ, நாயகியோ தோற்று, அதிலிருந்து மீண்டு எழும்போதே அது சிறந்த கதையாக அமைகிறது. எவ்விதமான ஏற்ற இறக்கமும் இல்லாமல், எந்தச் சவாலும் இல்லாமல் ஒரு நல்ல கதையைச் சொல்லவே முடியாது. நிஜவாழ்வில் அது பல மடங்காக அமையும். தோல்வியே நம் கற்றுக்கொள்ளும் பண்பை வளர்க்கிறது. குறைகளைக் களைந்து மேம்படுத்திக்கொள்ள உதவுகிறது.

டங்ஸ்டன் உலோகத்தில் மின்சாரம் ஒளிரும் எனக் கண்டறிந்து அதன் மூலம் உலகின் முதல் மின்சார பல்பை உருவாக்கி இந்த உலகை ஒளிமயமாக்கியவர் தாமஸ் ஆல்வா எடிசன். அதற்கு முன்பு பலவிதமான உலோகங்களில் அவர் பரிசோதனை மேற்கொண்டார். ஆயிரக்கணக்கில் முயற்சி செய்து தோல்வியுற்று, இறுதியில் டங்ஸ்டனில் மின்சாரம் ஒளிர்வதைக் கண்டறிந்தார். ‘இதற்கு முன்பு நான் தோற்கவில்லை. மாறாக, ஆயிரக்கணக்கான உலோகங்களில் மின்சாரம் ஒளிராது என்பதைக் கற்றுக்கொண்டிருக்கிறேன். அதுவும் கண்டுபிடிப்புதான்’ என்று சொன்னார் அவர். இந்த மனப்பான்மைதான் வெற்றி பெறுகிறவர்களின் தனித்தன்மை ஆகும்.

வெற்றி என்பது மனித வாழ்வில் மிக அவசியமான ஒன்று. பல வகைகளில் அது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தன்னம்பிக்கையை அதிகரிக்கவும், மனநிறைவை அடையவும், சமூகத்தில் மதிப்பையும் மரியாதையையும் பெறவும் வெற்றி துணை நிற்கிறது. சவால்களை எதிர்கொள்ளும் துணிவைத் தருகிறது. தாங்கள் செயல்படும் துறையில் தோல்விகள் மூலம் கற்று, அதனால் மேம்பட்டு வெற்றிகரமாக வலம்வரும் மனிதர்கள் சமூகத்தில் மதிக்கப்படுகிறார்கள். அவர்களிடம் நட்பு பாராட்ட அனைவரும் விரும்புகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு தனிப்பட்ட நபரின் வெற்றியானது அவரைச் சுற்றி இருப்பவர்களுக்குப் பெரும் உத்வேகமாக அமைகிறது, இது சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கிறது. வெற்றி என்பது இலக்கை அடைவது மட்டுமல்ல, தோல்விகளில் நாம் கற்றுக்கொண்டவற்றை நடைமுறைப்படுத்துவதும் ஆகும்.

வெற்றி என்பது ஒரு பயணம், இறுதி இலக்கு அல்ல. ஓர் இலக்கு முடிந்த பிறகு இன்னொரு இலக்கு தொடங்கும். ஆனால், வளர்ச்சிப் பயணம் தொடர்ந்துகொண்டே இருக்கும். உளவியல் நிபுணர் கேரோல் ட்வெக் என்பவர், நிலையான வெற்றி அடைந்தவர்களை ஆய்வுக்கு உட்படுத்தினார். அவர்கள் அனைவரும் வளர்ச்சி மனப்பான்மை கொண்டவர்களாக இருப்பதை அவர் கண்டறிந்தார். தோல்வியைக் கண்டு அஞ்சாதவர்களாகவும், வெற்றியில் அப்படியே தேங்கி நிற்காதவர்களாகவும் அவர்கள் இருப்பதாக அந்த ஆய்வு சொன்னது. மாறாக, இறுகிய மனநிலையும், தோல்வி குறித்த அதீத அச்சவுணர்வும் கொண்டவர்கள் திறமையும் உழைப்பும் இருந்தாலும் வெற்றி பெறுவதில்லை என்கிறது அதே ஆய்வு.

ஒருவகையில் வெற்றி, தோல்வியை நாம் எப்படி எதிர்கொள்கிறோம் என்பதை வைத்து, நம்மை நாமே அறிந்துகொள்ள முடியும். வெற்றிப்பயணம் முழுமையாக அமைவது அவசியம். வெற்றியின் மூலம் நம்மை உயர்த்திக்கொள்வோம். உறவுகளை மேம்படுத்தி, சமூகத்தை வளப்படுத்தி, முழுமையான வெற்றியின் சுவையைப் பருகுவோம்.



The Culturepreneur

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்

# ஆபரேஷன் சிந்தூர்...

## அதிரடியாக நம் தேசம் அடைந்த வெற்றி!




எல்லையில் நிற்கும் ராணுவம் நம் தேசத்தைப் பாதுகாப்பான சூழலில் வைத்துள்ளது என்று மீண்டும் ஒருமுறை பெருமிதம் அடையும் தருணம் நமக்கு வாய்த்திருக்கிறது. பாகிஸ்தானுடன் ஏற்பட்ட மோதலில் இந்தியாவின் வலிமையை நிரூபித்து நம் தேசியக்கொடியைப் பட்டொளி வீசிப் பறக்கச் செய்திருக்கிறார்கள் நம் முப்படையின் வீரர்களும்! அவர்களின் வீரத்துக்கும் அர்ப்பணிப்புக்கும் தியாகத்துக்கும் தலைவணங்கி மரியாதை செய்வோம்.

கண்ணுக்கு எதிரே ஆயுதங்களை ஏந்தி வரும் எவரையும் எதிரி என்று அடையாளம் கண்டுகொள்ள முடியும். அவர்களை எதிர்த்துப் போரிடுவதும் மரபாக இருக்கும். ஆனால், கண்ணுக்குத் தெரியாத எதிரிகளாகத் தீவிரவாதிகளை உருவாக்கி இந்தியாவுக்குள் அனுப்பிக் கோழைத்தனமான தாக்குதல்களைத் தொடர்ச்சியாக நடத்திவருகிறது பாகிஸ்தான். இந்தியர்கள் அனைவருமே மத வேறுபாடுகளைக் கடந்து இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயலைக் கண்டித்துவருகிறார்கள். பாகிஸ்தான் அமைச்சர் ஒருவரே சமீபத்தில், “மேற்கத்திய நாடுகளின் தூண்டுதல் காரணமாக நாங்கள் இந்தியாவுக்கு எதிராகத் தீவிரவாதிகளை வளர்த்துவிடும் அசிங்கமான செயலைச் செய்துவருகிறோம்'' என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருப்பது அந்த நாட்டின் நிஜமான முகத்தை நமக்குப் புரியவைத்துள்ளது.

ஜம்மு காஷ்மீரில் உள்ள பஹல்காம் பகுதிக்கு சுற்றுலா சென்றிருந்த பயணிகள் 26 பேரை ஏப்ரல் மாதம் 22–ம் தேதி தீவிரவாதிகள் ஈவு இரக்கமின்றி சுட்டுக் கொன்றனர். குறிப்பாக இந்தியக் கடற்படை வீரர் வினய் நார்வால் திருமணமான ஆறாவது நாளில் கொல்லப்பட, கணவரின் உடலுக்குப் பக்கத்தில் உடைந்து போய் உட்கார்ந்திருந்த ஹிமான்ஷியின் சோகக்காட்சி இந்தப் பயங்கரத்தின் அழிக்கமுடியாத சாட்சி.

“இந்தத் தாக்குதல் கோழைத்தனமானது. இதைக் கண்டு இந்தியர்களின் ரத்தம் கொதிக்கிறது. அப்பாவி மக்களைக் கொன்ற தீவிரவாதிகளுக்குக் கற்பனை செய்ய முடியாத அளவுக்குத் தண்டனை பெற்றுத் தருவோம்” என்று சபதம் செய்தார் பிரதமர் நரேந்திர மோடி.

பஹல்காம் தாக்குதலில் தங்கள் கணவரை இழந்த கைம்பெண்களின் குங்குமத்துக்கு நியாயம் பெற்றுத் தரும்விதமாக மேற்கொள்ளப்பட்ட பதிலடித் தாக்குதலுக்கு ‘ஆபரேஷன் சிந்தூர்’ என்று பெயர் வைக்கப்பட்டது. மே 7–ம் தேதி இந்திய ராணுவம் அதிரடியாகப் பாகிஸ்தானிலும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் காஷ்மீரிலும் இருக்கும் 9 தீவிரவாத முகாம்கள் மீது துல்லியத் தாக்குதல் நடத்தியது. டிரோன்கள் மற்றும் போர் விமானங்களைப்






பயன்படுத்தி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஏராளமான தீவிரவாதிகளை இந்தத் தாக்குதலில் இந்திய ராணுவம் அழித்தது.

வழக்கமாக எல்லையில்தான் இருநாட்டுப் படைகளுக்கு இடையே மோதல்கள் நிகழும். ஆனால், ஆபரேஷன் சிந்தூரில் எல்லையைக் கடந்து பாகிஸ்தானுக்குள் 100 கி.மீ தூரம் சென்று அங்கிருக்கும் தீவிரவாதிகள் முகாமை இந்தியா தாக்கியது. 1971–ம் ஆண்டு நடைபெற்ற இந்தியா – பாகிஸ்தான் போருக்குப் பிறகு பாகிஸ்தானுக்குள் இவ்வளவு தூரம் இந்தியப் படைகள் ஊடுருவிச் சென்றது இதுவே முதல் முறை.

‘ஆபரேஷன் சிந்தூர்’ வெற்றியையும் இரண்டு பெண் ராணுவ அதிகாரிகளை வைத்தே அறிவிக்கச் செய்தது இன்னொரு சிறப்பாக அமைந்தது. அவர்கள் கர்னல் சோஃபியா குரேஷி மற்றும் விங் கமாண்டர் வியோமிகா சிங் ஆகிய இரண்டு சிங்கப் பெண் அதிகாரிகள். இந்திய ராணுவத்தின் அதிகாரியான 36 வயது சோஃபியா குரேஷி, கடந்த 2010 முதல் பாகிஸ்தான் பயங்கரவாதத்திற்கு எதிராக அமைதி காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். ராணுவக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்திய விமானப் படையின் விங் கமாண்டரான வியோமிகா சிங், 2019 டிசம்பரில் இந்திய விமானப்படையில் ஹெலிகாப்டர் விமானியாக நியமிக்கப்பட்டார். ஜம்மு காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் உயரமான பகுதிகள், இந்தியாவின் மிகவும் சவாலான நிலப்பரப்புகள் சிலவற்றில் ஹெலிகாப்டர்களை அவர் இயக்கியுள்ளார்.




கடந்த காலங்களில் இரண்டுமுறை இதேபோல எல்லை தாண்டித் துல்லியத் தாக்குதல் நடத்தியுள்ளது இந்திய ராணுவம். 2016–ம் ஆண்டு காஷ்மீரில் உள்ள உரி என்ற பகுதியில் செயல்படும் இந்திய ராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். தாக்குதலில் இந்திய வீரர்கள் 19 பேர் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாக 10 நாட்களில் இந்திய ராணுவம் துல்லியத் தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் காஷ்மீர் பகுதிக்குள் சென்று தீவிரவாத முகாம்களில் தாக்குதல் நடத்தி 150 தீவிரவாதிகளைக் கொன்றது.

இதற்கு அடுத்ததாக 2019 பிப்ரவரியில் காஷ்மீரின் புல்வாமா பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 40 சி.ஆர்.பி.எஃப் வீரர்கள் கொல்லப்பட்டனர். இதற்குப் பழி தீர்க்கும் தாக்குதலை 12 நாட்களில் தொடுத்தது இந்தியா. ‘சர்ஜிகல் ஸ்ட்ரைக்–2’ என வர்ணிக்கப்படும் இதை மேற்கொண்டது இந்திய விமானப் படை. அதிகாலை நேரத்தில் இந்திய விமானப் படையின் 16 போர் விமானங்கள் ஒருங்கிணைந்து பாகிஸ்தானுக்குள் சென்று நிகழ்த்திய இந்தத் தாக்குதல் பல விதங்களில் முக்கியத்துவம் பெற்றது. தீவிரவாதிகளின் பல முகாம்கள் தரைமட்டம் ஆக்கப்பட்டன. ‘பாகிஸ்தானின் ராணுவ முகாம்களை நாங்கள் தாக்கவில்லை. பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தவில்லை. முழுக்க முழுக்கத் தீவிரவாத முகாம்களைத் தாக்கி அழிப்பது மட்டுமே நோக்கம்’ என இந்தியா அப்போது சொன்னது.

இம்முறையும் அதேபோலப் பொதுமக்களுக்குப் பாதிப்பு இல்லாத வகையில்தான் இந்தியாவின் தாக்குதல் நடந்தது. ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலால் ஆத்திரமடைந்து பாகிஸ்தான் ராணுவம் இந்தியா மீது தொடர்ச்சியாக நான்கு நாட்கள் தாக்குதல் நடத்தியது. இதனால் பொதுமக்கள் பெரும் அவதிக்கு ஆளானார்கள். என்றாலும், இந்தியா அப்படி பாகிஸ்தானில் அப்பாவி மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் எந்தச் செயலையும் செய்யவில்லை. அதே நேரத்தில் பாகிஸ்தான் ஏவிவிட்ட டிரோன்களை அழித்து, அந்த நாட்டின் விமானதளங்களையும் தாக்கி நமது வலிமையை நிரூபித்தது.

இப்போது பாகிஸ்தானில் நுழைந்து தாக்கியதன் மூலம் தீவிரவாதத்துக்கு எதிரான போரைப் பாகிஸ்தான் மண்ணுக்கு நகர்த்தியிருக்கிறது இந்தியா. அதாவது, ‘இனி எப்போது இந்தியாவில் தீவிரவாதத் தாக்குதல் நடந்தாலும், அந்தத் தீவிரவாதிகளை முறியடிக்க பாகிஸ்தானுக்குள் இந்தியா நுழைந்து தாக்கும்’ என்ற உரிமையை உரக்கச் சொல்லியிருக்கிறது. அது உலகம் முழுக்க எதிரொலித்திருக்கிறது. ●

# வெற்றிக்குத் தேவை நிதானம்!

வாழ்க்கையில் வெற்றியடைய, நாம் பல விஷயங்களில் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பூமியையே சூழ்ந்திருக்கும் இருளை அதிகாலை விடியலில் சூரியன் அகற்றுவது போல, நிதானமாக அணுகினால் எல்லாப் பிரச்னைகளும் விலகி ஓடும்.

பிரச்னைகளைக் கண்டு பயப்படுவது கோழைத்தனம். புத்திசாலிகள் பிரச்னைகளை எதிர்கால வாய்ப்பாக மாற்றிக் கொள்கிறார்கள். 'பிரச்னைகளை எப்படிச் சமாளிக்கலாம்' என மண்டையைப் போட்டுப் புரட்டிக் கொண்டிருப்பதைவிட, 'புதிதாக என்ன செய்யலாம்' என்று சிந்திப்பது தீர்வுகளை உருவாக்கிக் கொடுக்கும்.

பிரச்னை வரும்போது, அதை ஆராய வேண்டும். முதலில் செய்ய வேண்டியது என்ன? அது முக்கியமான பிரச்னையா? உடனடியாகத் தீர்க்க வேண்டியதா? என்பதை யோசிக்க வேண்டும். சிலர் எப்போதும் எதிலும் அவசரம் காட்டுவார்கள். நிதானமாக முடிவுகளை எடுக்க வேண்டும். சில பிரச்னைகள், நாம் அமைதியாகக் காத்திருந்தாலே காணாமல் போய்விடும்.

உணர்ச்சி வசப்படுகிறவர்கள் பல்வேறு பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். சிறிய விஷயங்களில்கூட நாம் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். பிரச்னைகள், சிக்கல்கள், தடைகள், தோல்விகள் வரும்போது மனம் தளர்வடைகிறது. தடுமாறுகிறது. அந்த நேரத்தில், 'ஏன் இப்படி ஆனது? இனி செய்ய வேண்டியது என்ன?' என்பதை நிதானமாக யோசித்துச் செயல்படுங்கள். ஒரு மொட்டு வளர்ந்து, மலர்ந்து, காயாகி, அதன்பிறகே கனியாக மாறும். நிதானமாகக் காத்திருங்கள். எல்லாமே கனிந்துவரும்.



# வெற்றியின் வரையறை எது?

வெற்றி, தோல்வி என்பவை நிகழ்ச்சிகளை வரையறுக்கும் சொற்கள்; மனிதர்களை வரையறுப்பவை அல்ல. ஒருவர் ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்கிறார் என்பதாலேயே அவரை வெற்றியாளர் என்று சொல்ல முடியாது. தனக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை ஒருவரால் அடைய முடியவில்லை என்பதாலேயே அவரைத் தோல்வியடைந்தவர் என்று சொல்ல இயலாது. ஒரு செயலில் வெற்றிபெற்ற ஒருவர், இன்னொரு விஷயத்தில் தோற்கலாம். ஒரு செயலில் தோல்வியைத் தழுவிய ஒரு மனிதர், இன்னொரு விஷயத்தில் மகத்தான வெற்றி பெறலாம். எல்லாமே தனித்தனிச் சூழல்களில் நிகழும் வெவ்வேறு சம்பவங்கள்.

ஒருவர் தன் தொழிலில் மகத்தான வெற்றி பெற்று, கோடிகளைக் குவித்திருக்கலாம். ஆனால், தன் மகன் அல்லது மகளுக்கு வழிகாட்டவும் தோள் கொடுக்கவும் செய்யாமல், ஒரு பெற்றோராக அவர் முழுத்தோல்வி அடைந்திருக்கலாம். அதேபோல், தான் நடத்திய வியாபாரத்தில் பெரும் தோல்வி அடைந்த ஒருவர், மிக நல்ல அப்பாவாகத் தன் குழந்தைகளுக்கு இருக்கலாம். வெற்றி – தோல்வி என்பவை ஒரு செயல் எப்படி நடந்தது என்பதைத்தான் குறிக்கின்றன. தனிநபர்களை வரையறுப்பதில்லை. இந்த வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

# ஒரு வார்த்தை... இரண்டு வார்த்தை!

உலகின் நம்பர் ஒன் பணக்காரர், அமேசான் வர்த்தக நிறுவனத்தின் தலைவர் ஜெஃப் பெஜோஸ். அவரிடம் ஒருமுறை, "உங்களின் வெற்றி ரகசியம் என்ன?" என்று கேட்டனர். "இரண்டு வார்த்தைகள்தான் காரணம்" என்றார் பெஜோஸ்.

"அந்த இரண்டு வார்த்தைகள் என்ன?"

"நல்ல முடிவுகள்!"

"நல்ல முடிவுகளை எடுப்பதற்கு எது உதவும்?"

"ஒரு வார்த்தையில் அதைச் சொல்லலாம்!"

"அந்த ஒரு வார்த்தை என்ன?"

"அனுபவம்!"

"சரி, அந்த அனுபவம் எங்கிருந்து கிடைக்கிறது?"

"இரண்டு வார்த்தைகளில் அதைச் சொல்லலாம்."

"அந்த இரண்டு வார்த்தைகள் என்ன?"

"தவறான முடிவுகள்!"

ஆம், தவறான முடிவுகளில் கிடைக்கும் அனுபவங்கள் மூலமே, சரியான முடிவுகளை எடுக்க முடியும்.




## தானாக மாறும்!

பிரெஞ்சு விஞ்ஞானி பாஸ்கல் என்பவரிடம் ஒரு மாணவன் போனான். "உங்களுக்கு இருப்பது போன்ற புத்திசாலித்தனமான மூளை இருந்தால், நானும் சிறந்த மனிதனாக இருப்பேன்" என்றான். பாஸ்கல் உடனே, "நீ சிறந்த மனிதனாக இருக்கப் பழகு! உன் மூளை என்னுடையதைவிடப் புத்திசாலித்தனமானதாக மாறும்" என்றார். சிறந்தவராக இருக்கப் பழகினால், எல்லாமே சிறப்பாக மாறும்!

## கைத்தட்டல் கேட்கிறது!

புதிதாகப் பிறந்த கொசு ஒன்று, முதல்முறையாகப் பறப்பதற்குப் பழகிப் பார்த்தது. கொஞ்ச தூரம் பறந்து சென்று திரும்பியது அது. போகும்போது இருந்ததைவிட அதிக மகிழ்ச்சியுடன் திரும்பியது குட்டிக் கொசு. ''பறக்கும் அனுபவம் எப்படி இருக்கிறது?'' என அம்மா கொசு கேட்டது. குட்டிக் கொசு உற்சாகமாக, "அம்மா! நான் பறந்து போனபோது மனிதர்கள் எல்லோரும் கைத்தட்டிப் பாராட்டினார்கள். அதனால் மகிழ்ச்சியாக இருந்தது" என்றது.

தன்னை அடிப்பதற்காக மனிதர்கள் கைத்தட்டியதை, தன்னைப் பாராட்டுவதாகப் புரிந்துகொண்ட அந்தக் குட்டிக்கொசு போன்ற நேர்மறை உணர்வுடன் இருந்தால் போதும்... வாழ்வில் எல்லாப் பிரச்னைகளையும் எதிர்கொள்ள முடியும்.





## அர்த்தமற்ற கவலைகள்!

ஏதாவது ஒரு விஷயத்துக்காக கவலைப்படும் சமயங்களில் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகள் இவை. 'நான் எதற்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்? இது கவலைப்பட வேண்டிய விஷயம்தானா? இப்படிக் கவலையைச் சுமந்துகொண்டு சோகமாக இருந்தால், இந்தச் சூழ்நிலை மாறிவிடுமா?'

இப்படி மனதுக்குள் கேட்டுப் பார்த்தால், பல கவலைகள் அர்த்தமற்றவையாகத் தெரியும். கவலைகள் மலையாக உருவெடுத்து, நம் முதுகில் சுமையாக ஏறி அழுத்த அனுமதிக்கக்கூடாது. அப்படிப்பட்ட மனநிலையை வளர்ப்பதும் கூடாது. கவலைகளுடன் போராடி, அவற்றை வெற்றிகொள்ள முயற்சி செய்யுங்கள்.

'இன்று நான் எதற்காகவும் கவலைப்பட மாட்டேன். எந்தப் பிரச்னையையும் எதிர்கொண்டு மீண்டு வருவேன்' என ஒவ்வொரு நாளும் உறுதி எடுங்கள். 'இது நம்மால் முடியும், நிச்சயம் முடியும்' என்கிற உறுதியுடன், எப்போதும் எதிலும் வெற்றியைக் குறி வைத்துச் செயல்படுங்கள். வெற்றி நிச்சயம்.



# வித்தியாசமாகச் சிந்தித்தால் வெற்றி!

ஒரு ஊருக்குச் செல்வதற்குப் பல வழிகள் இருப்பது போல, நம் இலக்கை அடைவதற்கும் பல்வேறு வழிகள் உள்ளன. ஒரு வழி அடைபட்டால், மாற்று வழி பற்றி யோசிக்க வேண்டும். 'கதவு எப்போது திறக்கும்' என அங்கேயே காத்திருப்பது அபத்தம். விஞ்ஞான மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், 'ஒரே வேலையைத் திரும்பத் திரும்ப ஒரே மாதிரிச் செய்துவிட்டு, வித்தியாசமான பலனை எதிர்பார்ப்பதற்குப் பெயர்தான் முட்டாள்தனம்' என்றாராம். புதுப்புது பாதைகளில்தான் புதிய வாய்ப்புகள் ஒளிந்திருக்கும்.

மற்றவர்கள் இந்த உலகத்தைப் பார்க்கும் பார்வை வேறு. வெற்றிகரமான மனிதர்கள் பார்க்கும் பார்வை வேறு. பெரிய திறமைசாலிகளாக இல்லாவிட்டாலும், ஏதோ ஒரு வித்தியாசம் காட்டி அவர்கள் ஜெயிக்கிறார்கள். எவ்வளவு பிரச்னைகள் குறுக்கே நின்றாலும், எத்தனை தடைகள் அணை போட்டாலும், எவ்வளவு எதிர்மறை விமர்சனங்கள் எழுந்தாலும், எல்லாவற்றையும் தாண்டி அவர்களால் வெற்றியின் பாதையை அடைய முடிகிறது. ஏனெனில் அவர்கள் சில விஷயங்களை உறுதியாக நம்புகிறார்கள். அது அவர்களின் தினசரி வாழ்வில் பிரதிபலிக்கிறது. அந்த வெற்றி மந்திரங்கள் இங்கே:

- முழுமையான உழைப்பையும், போதுமான நேரத்தையும் கொடுக்கத் தயாராக இருந்தால் போதும்... சாத்தியமில்லாத விஷயம் என எதுவும் இல்லை.
- 'இது கஷ்டம்' எனச் செய்யத் தயங்கும் ஒரு விஷயத்துக்கு முன்னுரிமை கொடுத்து முதலில் செய்யப் பாருங்கள். அது உங்கள் வாழ்வையே மாற்றும்.
- நீங்கள் அதிகம் விரும்பாத மனிதர்கள்தான் உங்களுக்குப் பயனுள்ள, வெளிப்படையான அறிவுரைகளைத் தருவார்கள்.
- மிக அதிகமாகத் தன்னை விரும்பும் ஒருவரையே, 'வெற்றி' தேடிச் சென்று தஞ்சமடைகிறது.
- நீங்கள் வாழ்வில் என்னவாக ஆக விரும்புகிறீர்கள் என ஆரம்பத்திலேயே முடிவு செய்துவிட்டால், அதை அடைவது சுலபம்.
- எதிர்மறையாகவே பேசும் மனிதர்களுடன் இருப்பதுதான், தோல்வியைச் சந்திப்பதற்கு முக்கியமான காரணம். அந்தக் காரணத்தைத் தவிர்த்துவிடுங்கள்.
- கவலையா மகிழ்ச்சியா? பயமா துணிச்சலா? முரட்டுத்தனமா கருணையா? எதைத் தேர்ந்தெடுப்பது என்பது எப்போதும் உங்கள் கையில்தான் இருக்கிறது.
- எதைச் செய்தாலும், அதைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் ஜெயிப்பதை அதன்பின் எதுவும் தடுக்காது.
- அக்கறை இல்லாமல் செய்யப்படும் எந்தச் செயலும் அற்புதமான வெற்றியை நிச்சயமாகக் கொடுக்காது.
- 'கடந்த முறை இதில் தோற்றுவிட்டோம்' என்பதை மட்டுமே காரணமாகச் சொல்லி, மீண்டும் ஒருமுறை முயற்சி செய்வதைத் தவிர்க்காதீர்கள்.
- எவ்வளவு கடினமான சூழலிலும், நீங்கள் முழு முயற்சியுடன் செய்யும் ஒரு செயல் மகத்தான பலனைக் கொடுக்கும்.
- உங்கள் சார்பாக இன்னொருவர் முடிவெடுக்க முடியாது. எல்லா முடிவுகளையும் நீங்களே எடுங்கள்.
- கவனிக்கவும் கற்றுக்கொள்ளவும் தயாராக இல்லாதவர்களை வெற்றி நெருங்காது.
- உங்களை விமர்சனம் செய்ய நிறைய பேர் இருக்கலாம். அவர்கள் சத்தமாகவும் எதிர்க்குரல் எழுப்பலாம். அதற்காக நீங்கள் செய்வது தவறாகிவிடாது. மனதுக்குச் சரி என்று பட்டதைத் தயங்காமல் செய்யுங்கள்.
- தற்காலிகத் தீர்வுகளும் சுலபமான வழிகளும் நிலைத்து நிற்கும் வெற்றியைத் தராது.



# வெற்றி தரும் மனவலிமை மந்திரங்கள்!

யூகலிப்டஸ் என்ற கம்ப்யூட்டர் நிறுவனம் ஐரோப்பாவில் ஆரம்பிக்கப்பட்டது. பெருநிறுவனங்களுக்குக் கணினி ஃபைல்களைச் சேமித்து வைக்கும் கிளவுட் ஸ்டோரேஜ் வசதியைச் செய்துதரும் நிறுவனம் அது. ஆரம்பித்து இரண்டு ஆண்டுகளுக்கு எந்த பிசினஸும் நடக்கவில்லை.

நிர்வாகிகள் ஒருநாள் உட்கார்ந்து பேசினர். "எத்தனை நாட்களுக்குத்தான் வெறும் பூஜ்ஜியத்தையே பார்த்துக்கொண்டிருப்பது? ஏதாவது முடிவெடுக்க வேண்டும்" என்றார் ஒரு நிர்வாகி. அவர்கள் முன்பாக மூன்று வாய்ப்புகள் இருந்தன. ஒன்று, தோல்வியை ஒப்புக்கொண்டு இதுவரை அடைந்த நஷ்டத்தை நிர்வாகிகள் ஏற்றுக்கொள்வது. இரண்டு, நிறுவனத்தை வேறு பிசினஸுக்கு மாற்றுவது. மூன்று, இதே முயற்சியைத் தளராமல் தொடர்வது.

நிர்வாகிகளில் சிலர் மட்டும், "இது எதிர்காலத்துக்கான பிசினஸ், நிச்சயம் ஜெயிக்கும்" என்று மனவலிமையுடன் சொன்னார்கள். ஊழியர்களில் பலரே வேலையைவிட்டுப் போகும் சூழல் வந்தது. அப்போதும் அவர்கள் நம்பி, நம்பிக்கையுடன் இருந்த பிற ஊழியர்கள் உழைப்பில் தொடர்ந்தார்கள். விரைவில் உலகப் புகழ்பெற்ற அமேசான் நிறுவனமே இவர்களின் சேவையைப் பயன்படுத்த வந்தது. ஒரே நாளில் யூகலிப்டஸ் என்ற அந்தச் சிறு நிறுவனத்துக்குப் பெரும் கவனம் கிடைத்தது. வெற்றியும் வந்தது.

உடல் வலிமை வேண்டும் என்றால், உடற்பயிற்சி செய்யலாம். மனவலிமைக்கு ஏதேனும் பயிற்சி இருக்கிறதா? வெற்றிகரமான மனிதர்கள் சில விஷயங்களைத் தவிர்ப்பதன் மூலம் மனவலிமை பெறுகிறார்கள். அந்த மனவலிமை மந்திரங்களை அறிவோம், வாருங்கள்!

- மனவலிமை மிக்கவர்கள், 'எனக்கு இப்படி ஆகிவிட்டதே' எனச் சுய இரக்கம் கொள்வதில்லை. அது எதிர்மறையான விளைவுகளைத் தரும் என்பதை அறிந்து, தங்கள் நேரத்தை மதிப்பான விஷயங்களுக்கே செலவிடுகிறார்கள்.
- தங்களுக்குத் தெரியாத, தங்களால் முடியாத செயல்களை அவர்கள் கஷ்டப்பட்டுச் செய்ய முயல்வதில்லை. தங்கள் பலம் என்ன என அறிவார்கள். அதைப் பொறுத்தே தங்கள் இலக்குகளை நிர்ணயிக்கிறார்கள்.
- நிறைய பேருக்குச் சின்ன மாற்றம்கூடப் பயம் தரும். ஆனால், மனவலிமை மிக்கவர்கள் மாற்றங்களுக்கு அஞ்சுவதில்லை. மாற்றங்களை ஏற்க மறுத்தால் வளர முடியாது என்பதை அவர்கள் உணர்வார்கள்.
- நாம் ஒன்று நினைக்க, நிகழ்வது வேறொன்றாக இருக்கும். நெருக்கடியான சில சமயங்களில் இதுபோன்ற தவறுகளைத் தவிர்க்க முடியாது. அதை நினைத்து அவர்கள் பதற்றம் அடைவதில்லை. அடுத்த வேலையைப் பார்க்கப் போகிறார்கள்.
- கடந்த காலத்தில் இழந்ததை நினைத்து அவர்கள் வருந்துவதில்லை. அதை இனி மாற்ற முடியாது என்பதை அவர்கள் அறிவார்கள். நிகழ்காலத்தில் மகிழ்ச்சியைத் தேடி, எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்கிறார்கள்.
- அவர்கள் ஒரே தவறைத் திரும்பத் திரும்பச் செய்வதில்லை. தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, அடுத்த முறை அதைச் சரியாகச் செய்கிறார்கள்.
- 'அவன் ஜெயித்துவிட்டானே' என அடுத்தவர்களின் வெற்றியைப் பார்த்து அவர்கள் பொறாமைப்படுவதில்லை. தங்கள் பாதையில் மட்டுமே கவனத்தை வைக்கிறார்கள்.
- ஒருமுறை தோற்றால், அதற்காக அவர்கள் சுருண்டு விடுவதில்லை. அதிலிருந்து மீண்டு வந்து ஜெயிப்பதற்கு அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.
- அவர்கள் உடனடி பலன்களை எதிர்பார்ப்பதில்லை. கடும் உழைப்பைக் கொடுத்து, நீண்ட காலம் காத்திருந்து, அதன்பிறகு ருசிப்பதே வெற்றி என்பதை அறிவார்கள்.



# விட்டுக்கொடுக்காத வெற்றியாளர்கள்!


ஒரே செயலைப் பல பேர் செய்கிறார்கள். அவர்களில் சிலர் மட்டுமே எப்படிச் சிகரம் தொடுகிறார்கள்? ஒரே அலுவலகத்தில் ஒரே மாதிரி வேலையைப் பல பேர் செய்கிறார்கள். அவர்களில் சிலர் மட்டுமே எப்படி மேலே மேலே உயர்ந்து செல்கிறார்கள்? அப்படி அவர்களிடம் என்ன இருக்கிறது?

அவர்கள் மற்றவர்களிடம் உதவி கேட்கத் தயங்குவதில்லை. உதாரணமாக, தெரியாத புது இடத்துக்கு நீங்கள் போகிறீர்கள். யார் யாரிடமோ விசாரித்து ஒரு வரைபடத்தை உருவாக்கிக்கொண்டு போவீர்களா? அல்லது சட்டென்று போனை எடுத்து கூகுள் மேப் பார்த்து வழியை அறிவீர்களா? ஏற்கனவே கூகுள் மேப் இருக்கும்போது புதிதாக வரைபடம் உருவாக்கத் தேவையில்லைதானே! இப்படித்தான் தேவையான இடங்களில், தேவைப்படும் உதவிகளை அவர்கள் தயக்கமின்றிப் பெறுகிறார்கள்.

ஒரு பிரச்னை எழுந்தால், 'இது என்ன பிரச்னை' என்று அவர்கள் குழம்புவதில்லை. 'இதற்கு என்ன தீர்வு' என்று அடுத்த கட்டத்துக்குப் போய்விடுகிறார்கள். எவ்வளவு மோசமான சூழலிலும், 'இப்படி வந்து சிக்கிக்கொண்டேனே' என்று அவர்கள் புலம்புவதில்லை. 'இதிலிருந்து எப்படி வெளியில் போவது?' என்று வழியைத் தேடுகிறார்கள்.

ஒரு குழந்தை எத்தனை முறை தடுமாறி விழுந்தாலும், எழுந்து எழுந்து நடக்கக் கற்றுக்கொள்வது போல, அவர்கள் எத்தனை தோல்விகளுக்குப் பிறகும் வெற்றியைத் தேடி அடைவார்கள். அதற்காக எப்படிப்பட்ட ரிஸ்க்கையும் எடுக்கத் தயங்க மாட்டார்கள். ரிஸ்க் எடுத்தால்தான் எதிலும் அடுத்த கட்டம் என்ற ஒன்றை அடைய முடியும் என அவர்கள் அறிவார்கள்.

இப்படி விட்டுக்கொடுக்காமல் வெற்றியை அடைந்த சிலர் இங்கே:




**வுடி ஆலன்:** நான்கு முறை ஆஸ்கர் விருது வென்ற புகழ்பெற்ற ஹாலிவுட் திரைப்பட எழுத்தாளர், இயக்குநர், நடிகர். ஆனால், நியூயார்க் பல்கலைக்கழகத்தில் திரைப்படம் தொடர்பான படிப்புப் படித்தபோது பல தேர்வுகளில் தோல்வியடைந்து அங்கிருந்து வெளியே அனுப்பப்பட்டவர் அவர்.



**உர்சுலா பர்ன்ஸ்:** புகழ்பெற்ற ஜெராக்ஸ் நிறுவனத்தில் சாதாரண உதவியாளராகச் சேர்ந்தவர். அந்த அமெரிக்க நிறுவனத்தில் இருந்த அதிகாரிகள் அவரைத் தொடர்ந்து 10 ஆண்டுகள் சாதாரண வேலைகளிலேயே வைத்திருந்தார்கள். எஞ்சினியரிங் படித்திருந்த அவர், தன் திறமையாலும் உழைப்பாலும் மேலே மேலே உயர்ந்தார். ஒரு கட்டத்தில் அந்த நிறுவனத்தின் தலைமை

நிர்வாகி ஆனார். உலகின் டாப் 500 நிறுவனங்களில் ஒன்றின் தலைமைப் பொறுப்புக்கு வந்த முதல் கறுப்பினப் பெண் என்ற பெருமையை அடைந்தார். இன்று உலகின் சக்திவாய்ந்த பெண்களில் ஒருவராக அறியப்படுகிறார்.




**கேப்ரியேல் ஜீசஸ்:** பிரேசில் நாட்டைச் சேர்ந்த கால்பந்து வீரர். உலக அளவில் அதிக ரசிகர்களைக் கொண்டிருக்கும் கால்பந்து வீரர்களில் ஒருவர். அவர் சிறுவனாக இருந்தபோது பிரேசில் நாட்டில் உலகக்கோப்பைக் கால்பந்து விளையாட்டு நடைபெற்றது. அப்போது கால்களில் செருப்பு அணியக்கூட இயலாத வறுமையில், வீதிகளில் பெயின்ட் அடிக்கும் வேலையைச் செய்து சம்பாதித்தவர். தன் முயற்சியாலும் திறமையாலும் முன்னேறி, உலகக்கோப்பையில் பிரேசிலுக்காக விளையாடினார்.



**அன்னா வின்டோர்:** இன்று ஃபேஷன் துறையைப் பொறுத்தவரை உலக அளவில் கவனிக்கப்படும் பிரபலம். 'வோக்' என்ற ஃபேஷன் இதழின் நிர்வாகி. தனது தனித்தன்மையால் ஃபேஷன் துறையை முன்னேற்றும் இவர், இளம் வயதில் ஒரு ஃபேஷன் பத்திரிகையில் வேலை பார்த்தபோது நிர்வாகியுடன் கருத்து வேறுபாடு கொண்டதால் வெளியேற்றப்பட்டவர். ‘‘என் கருத்து சரி என்று உறுதியாக இருந்தேன். உங்களிடம் இருப்பது மிகச்சிறந்த ஐடியா என நம்பினால், யார் எதிர்த்தாலும் அதைச் செயல்படுத்துங்கள், முன்னேறலாம்’’ என்று வெற்றி ரகசியம் சொல்கிறார்.



**ஹோவர்ட் ஷுல்ஸ்:** காபிக் கொட்டைகளை விற்கும் சாதாரண நிறுவனமாக ஸ்டார்பக்ஸ் இருந்தது. அதை காபி ஷாப் நடத்தும் நிறுவனமாக மாற்றலாம் என யோசனை சொன்னார் ஷுல்ஸ். நிறுவன நிர்வாகிகளுக்கு அது பிடிக்காமல் அவரை வேலையிலிருந்து துரத்தினர். சில ஆண்டுகளில் உழைத்து மேலே வந்து அதே ஸ்டார்பக்ஸ் நிறுவனத்தை விலைக்கு வாங்கினார் அவர். உலகின் முன்னணி நிறுவனமாக அதை மாற்றினார்.



**ஸ்டேன் ஸ்மித்:** டென்னிஸ் விளையாட இவர் களமிறங்கியபோது அமெரிக்க விளையாட்டு அதிகாரிகள் இவரைத் திட்டினர். ஒழுங்காகப் பயிற்சி எடுப்பதில்லை, எதிலும் சரியான கவனம் இல்லை என்று விமர்சனம் செய்தனர். டென்னிஸ் மைதானத்தில் கோட்டுக்கு வெளியில் நின்று பந்து பொறுக்கிப் போடும் வேலையைக்கூட இவரைச் செய்ய அனுமதிக்கவில்லை. ஆனால், டென்னிஸ்தான் என் உயிர்மூச்சு என நம்பிய ஸ்டேன் ஸ்மித் உறுதியான மனதுடன் விளையாடினார். விளைவு: 8 முறை அமெரிக்காவுக்கு டேவிஸ் கோப்பையைப் பெற்றுத் தந்த மகத்தான வீரராக உயர்ந்தார். தன்னை நிராகரித்த அத்தனை பேரின் முகத்திலும் கரியைப் பூசினார்.



**சோய்சிரோ ஹோண்டா:** வறுமையான குடும்பத்தில் பிறந்தவர். சிறுவனாக இருந்தபோது தந்தைக்கு உதவி செய்தபடி அவர் படித்தார். எஞ்சினியரிங் துறையில் பெரும் ஆர்வம் அவருக்கு இருந்தது. குடும்ப வறுமை காரணமாகப் பட்டம் பெற்ற பிறகு அவரால் படிப்பைத் தொடர முடியவில்லை. சைக்கிள்களில் பழைய எஞ்சின்களைப் பொறுத்தி அவற்றை இருசக்கர வாகனம் போல மாற்றித் தரும் தொழிலைப் பிறகு செய்தார். அட்டகாசமான வடிவமைப்பில் மோட்டார் சைக்கிள்களை உருவாக்க வேண்டும் என்ற கனவு அவருக்குள் எழுந்தது. தன் கனவைப் பின்தொடர்ந்த அவர், புகழ்பெற்ற ஹோண்டா நிறுவனத்தை உருவாக்கினார். மோட்டார் சைக்கிள்களைத் தாண்டி கார்களையும் உலகம் முழுக்க விற்கும் நிறுவனமாக அது மாறியது. ●



# வலிமையை உணர்ந்தால் வெற்றி!

பெருநகரத்தில் விளையாட்டுப் பயிற்சியாளராக இருக்கும் ராமன் ஒருநாள் கிராமம் ஒன்றின் வழியே தன் வாகனத்தில் போனபோது திடீரென வாகனம் பழுதாகிவிட்டது. சரிசெய்வதற்குப் பணியாளர்கள் வரும்வரை ஒரு விவசாயி வீட்டு வாசலில் கட்டிலில் ஓய்வெடுத்தார். அந்த வீட்டில் அவர் பார்த்த காட்சி அவருக்கு அதிர்ச்சி தந்தது. விவசாயி வளர்க்கும் கோழி ஒன்று தன் குஞ்சுகளுடன் அலைந்து இரையைக் கொத்திக்கொண்டிருக்க, அந்தக் குஞ்சுகளுக்கு மத்தியில் கழுகுக்குஞ்சு ஒன்றும் கோழிக்குஞ்சு போலவே திரிந்து தரையில் கிளறிக்கொண்டிருந்தது.

ராமன் குழப்பத்துடன் விவசாயியைப் பார்த்து, "இது என்ன அதிசயம்? கழுகுக்குஞ்சு ஏன் இந்தக் கூட்டத்தில் இருக்கிறது?" என்று கேட்டார்.

"அது மலையில் அடிபட்டுக் கிடந்துச்சு. ஆடு மேய்க்கப் போனபோது பார்த்துப் பரிதாபப்பட்டுத் தூக்கி வந்து மருந்து வச்சுக் காப்பாத்தினேன். கோழிக்குஞ்சுகளோட சேர்ந்துக்கிட்டு தோட்டத்துல சுத்தி வருது. அதை அதட்டி மிரட்டிப் பறக்க வைக்க முயற்சி பண்றேன். ஆனா அது தன்னைக் கோழிக்குஞ்சுன்னே நம்புது" என்று சொல்லிச் சிரித்தார் விவசாயி.

ராமன் அந்தக் கழுகுக்குஞ்சை விவசாயியிடம் கேட்டுத் தன் வீட்டுக்குத் தூக்கி வந்தார். அதற்கு நல்ல தீனி கொடுத்துத் தெம்பாக்கி, வீட்டு மொட்டை மாடிக்கு எடுத்துச் சென்றார். "நீ கோழிக்குஞ்சு இல்லை, கழுகுக்குஞ்சு. இந்த வானமே உனக்கு எல்லை, பறந்து போ!" என்று வானத்தை நோக்கித் தூக்கி வீசினார். அது பயந்து போய் சட்டென்று மொட்டை மாடியில் விழுந்தது. தன் சிறகுகளை அச்சத்தில் படபடவென அடித்துக்கொண்டு, தலையைக் குனிந்து தரையில் இரை தேட ஆரம்பித்தது. கோழிக்குஞ்சு போலவே தரையில் நடந்து போனது.

இப்படியே அவர் பல நாட்கள் தொடர்ந்து முயற்சி செய்தார். "நீ கால்களால் நடக்கப் பிறக்கவில்லை. வானில் பறக்கப் பிறந்திருக்கிறாய்" என்று சொல்வார். ஆனால், ஒரு பலனும் இல்லை. கடைசியில் ஒரு நாள் ராமன் கழுகுக்குஞ்சைத் தூக்கிக்கொண்டு ஒரு மலை உச்சிக்குப் போனார். மலையின் விளிம்பில் நின்றபடி, "முடிந்தால் வானத்தில் பற, இல்லாவிட்டால் பள்ளத்தில் விழுந்து செத்துப் போ!" என்றபடி அதைத் தூக்கி வீசினார். மொட்டை மாடியில் அதற்குப் பாதுகாப்பாக விழுவதற்குத் தரை இருந்தது. இங்கோ கிடுகிடு பள்ளத்தாக்கு! கீழே விழுந்தால் நொறுங்க வேண்டியதுதான். அது பயத்தில் கண்களை மூடிக்கொண்டது.

திடீரெனத் திரும்பவும் கண் திறந்து பார்த்தபோது, தான் தரையில் விழவில்லை என்பதை உணர்ந்தது. தூக்கி வீசப்பட்டதும் அதன் சிறகுகள் உள்ளுணர்வால் தூண்டப்பட்டு அது பறக்க ஆரம்பித்திருந்தது. சிறகுகளை

இன்னும் வேகமாக அடித்து அது உயரே உயரே பறந்து போனது. தான் கழுகு என்பதை உணர்ந்தபோது அதற்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. மகிழ்ச்சி ஒலி எழுப்பியபடி, தன்னைத் தூக்கி வீசிய ராமனைத் திரும்பிப் பார்த்தது. "நான் உனக்கு எதையும் புதிதாகத் தரவில்லை. நீ கழுகு என்பதை ஞாபகப்படுத்தினேன்" என்றார் அவர்.

இது கழுகின் கதை மட்டுமில்லை, நம் கதையும்தான்! "நான் கஷ்டப்பட்டு உழைத்தேன். ஆனால் தோற்றுவிட்டேன்" என்று பலரும் கண்களைக் கசக்குவார்கள். அவர்களில் பலரும், 'வெறும் உழைப்பு மட்டுமே வெற்றிக்குப் போதுமானது இல்லை. அதிர்ஷ்டமும் வேண்டும் போலிருக்கிறது' என்று நினைப்பார்கள். ஆனால், கடின உழைப்பு என்பதை அவர்கள் தவறாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

ஐந்து கிலோ அளவில் இருக்கும் அரிசிப் பை. 100 பைகளை மாடியில் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். ஒவ்வொன்றாகத் தூக்கிப் போகும் ஒருவர், ஐந்து பைகளை எடுத்துப் போவதற்குள் வியர்த்துவிடுவார். மூன்று பைகளை மொத்தமாகத் தோளில் சுமந்தபடி ஏறும் ஒருவர், அந்த நேரத்துக்குள் 15 பைகளை எடுத்துப் போயிருப்பார். அங்கு லிஃப்ட் இருப்பதைக் கண்டுபிடிக்கும் புத்திசாலியோ, இதே நேரத்தில் சாமர்த்தியமாக அத்தனை பைகளையும் லிஃப்ட்டில் ஏற்றி வியர்வை சிந்தாமலே எடுத்துப் போயிருப்பார். ஒவ்வொன்றாக எடுத்துப் போனவர், 'நான்தான் கடினமாக உழைத்தேன்' என்று சொல்வது அபத்தம் அல்லவா!

கடின உழைப்பு என்பது நம்மை வருத்திக்கொள்ளும் உழைப்பு அல்ல! எப்படிப்பட்ட உழைப்பு மிகச்சிறந்த விளைவுகளைத் தருகிறதோ, அதுவே கடின உழைப்பு. அந்தச் செயல் கடினமாக இருப்பதால், நிறைய பேர் அதைச் செய்வதற்கு அஞ்சுகிறார்கள். அதைவிட எளிதான வேறு செயல்களைச் செய்கிறார்கள். அதனால்தான் வெற்றியைத் தவறவிடுகிறார்கள்.

உதாரணமாக ஒருவர், தன் வீட்டில் இருந்தபடியே சோப்பு, மசாலாப் பொருட்கள், அழகுப் பொருட்கள் என்று எதையேனும் உருவாக்கி விற்பனை செய்யும் பிசினஸை சிறிய அளவில் தொடங்குகிறார் என வைத்துக்கொள்வோம். அந்தப் பொருட்களை எப்படிச் செய்வது எனக் கற்றுக்கொள்வது, தனது பிராண்டுக்குப் பெயர் வைப்பது, லோகோ வடிவமைப்பது, விற்பனைக்காக இணையதளம் உருவாக்குவது ஆகிய எல்லாமே சுலபமான வேலைகள். இவற்றில் பலவற்றை நாமே செய்ய வேண்டும் என்றுகூட இல்லை. யாரிடமாவது ஒப்படைத்தால் செய்துகொடுத்துவிடுவார்கள்.

ஆனால், வாடிக்கையாளர்களை அடையாளம் காண்பது, அவர்களிடம் பேசி விற்பனை செய்வது, மார்க்கெட்டிங் போன்றவையே கடினமான வேலைகள். இதற்கெல்லாம் பெரும் முயற்சி தேவை. இதைச் சரியாகச் செய்யாமல்தான் நிறைய பேர் தோற்கிறார்கள்.

நாம் எதற்கு அதிக நேரம் ஒதுக்குகிறோம் என்பதைக் கவனிக்க வேண்டும். அந்த வேலைகள் எப்படிப்பட்ட விளைவுகளைத் தருகின்றன என்பதையும் பார்க்க வேண்டும். இதுவரை செய்து பார்க்காத, செய்வதற்குக் கடினமான வேலைகளைச் செய்யும்போதுதான் வெற்றி நம்மைத் தேடி வரும். ●


RAMRAJ காட்டன் இந்தியாவின் கலாச்சாரம்

# வெண்மை

**VENMAII**

தமிழ் மாத இதழ்

மலர் 9 இதழ் 12

ஜுன் 2025

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**K. உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,

A2, தரை தளம்,

எண்.110, டிரினிடி காம்ப்ளக்ஸ்,

நான்காவது அவென்யூ,

அசோக் நகர், சென்னை - 600 083.

கைப்பேசி: 9952920801

email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

# விரும்பியதைச் செய்யுங்கள்!



பகவத் கீதை 'நீ என்னவாக வேண்டும் என்று ஏங்கித் தவிக்கிறாயோ, அதுவாகவே ஆகிவிடுறாய்' என்கிறது. உங்கள் மனம் விரும்பியதைச் செய்யுங்கள். மனதின் சக்தி மாபெரும் சக்தி. நீங்கள் செய்யும் பணி அல்லது தொழிலே உங்கள் அடையாளமாக மாறும்போது, வெற்றி சுலபமாகிறது.

கடந்த வருடங்களில் எல்லையற்றுப் பயணித்து இருக்கலாம். விரக்தியில் திசைமாறிப் போயிருக்கலாம். 'இது கிடைக்காவிட்டால் அது' என விரும்பிய வாய்ப்புக்குப் பதிலாக, கிடைத்த வாய்ப்புகளில் கடமைக்குக் காலம் கடத்துபவர்கள் எப்போதும் ஜெயிக்க முடிவதில்லை. உங்கள் மனம் விரும்பாத ஒன்றைச் செய்வதற்குப் பதிலாக, விரும்பியதைப் போராடியாவது செய்ய முற்படுங்கள்.

# துணிச்சலாக முடிவெடுங்கள்!

ஆமைக்கு அதன் ஓடுதான் வீடு. அதற்காக, 'இதுவே பாதுகாப்பு' என தனது ஓட்டுக்குள்ளேயே அது முடங்கிவிடுவதில்லை. அது உலகில் நீண்ட தூரம் கடல் பயணம் செய்யும் உயிரினங்களில் ஒன்றாக இருக்கிறது. அத்தனை சவால்களையும் தாண்டி நிலத்தில் பிரவேசிக்கிறது.

புதிய இடங்களில் செய்யும் புதிய முயற்சிகளால் மட்டுமே முன்னேற்றத்தை உணர முடியும். எப்போதும் துணிச்சலாக முடிவுகளை எடுங்கள். ஆபத்துகளைக் கண்டு அஞ்சும் யாரும் வெற்றிப்பாதையில் நடை போட முடிவதில்லை.

கிரிக்கெட்டில் ஒரு பந்துவீச்சாளர் எப்போதும் பேட்ஸ்மேனை அவுட்டாக்க வேண்டும் என்ற நினைப்போடுதான் பந்து வீசுகிறார். அந்தப் பந்துகளில்தான் பேட்ஸ்மேன் ரன் குவிக்கிறார். ரிஸ்க் எடுக்கக்கூடாது என நினைத்தால் அவர் ரன் எடுக்க முடியாது. சாதனையும் படைக்க முடியாது.



# எழுந்து விடுங்கள்!

கீழே விழுவது வேகமாக எழுவதற்காகவே. அதனால் விழுவதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். உடனே எழுந்து விடுங்கள். தோல்விகளின்போதுகூட நேர்மறை எண்ணங்களுடன் இருங்கள். அந்தத் தோல்விகளை மனதுக்குக் கொண்டுபோகாதீர்கள். 'முடியாது', 'கஷ்டம்', 'நடக்காது' போன்ற சொற்களை உங்கள் அகராதியில் இருந்து தூக்கி எறியுங்கள்.





# வித்தியாசம் காட்டுங்கள்!

இதுவரை யாரும் போகாத பாதையில் பயணம் செய்தால் மட்டுமே வெற்றி கிடைக்கும் என எதிர்பார்க்காதீர்கள். 'எல்லாவற்றையும் புரட்டிப் போடும் ஒரு புதிய முயற்சி மட்டுமே ஜெயிக்கும்' என நினைக்காதீர்கள். எல்லோரும் செய்யும் ஏதோ ஒரு செயலை, அவர்களைப் போலச் செய்யாமல் வித்தியாசமாகச் செய்தாலும் ஜெயிக்கலாம். பலரும் செய்யும் அதே வேலையை நீங்கள் செய்தாலும், அதில் காட்டும் சின்ன வித்தியாசம்கூட உங்களை வெற்றியை நோக்கி வழிநடத்திச் செல்லும்.

புதிய வாய்ப்புகளை எப்போதும் தவற விடாதீர்கள். சமயங்களில் 'இது வாய்ப்பு' எனக் கணிக்க முடியாதபடி அது மாறுவேடத்தில் வரக்கூடும். அப்போதும் அதை அடையாளம் கண்டுகொள்ளும் சாமர்த்தியத்தோடு இருங்கள்.

## தள்ளிப் போடாதீர்கள்!



வெற்றி ஏணியின் முதல் படிக்கட்டு, உழைப்புதான். தினமும் குறைந்தது 10 முதல் 12 மணி நேரம் உழைக்கத் தயங்காதீர்கள். இப்படிச் செலவிட உங்களுக்கு நேரம் அவசியம் என்பதால், நேரத்தை உருப்படியாக நிர்வகித்துச் செலவிடக் கற்றுக்கொள்ளுங்கள். இன்று செய்ய வேண்டிய எதையும் இன்றே செய்து முடித்துவிடுங்கள். 'நாளை பார்க்கலாம்' என்று தள்ளிப் போடாதீர்கள். ஒருவேளை நாளை அது நடக்காமலே கூடப் போய்விடக்கூடும்.

## உணர்வாகக் கலக்க வேண்டும்!



'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள். உப்பு இல்லையென்றால் நாம் உணவைச் சாப்பிடவே முடியாது. உணவுக்கு ருசி தருவது அதுதான். ஆனால் அந்த உப்பை ஒரு சிட்டிகைகூடத் தனியாக எடுத்து நம் வாய்க்குள் போட்டுக்கொள்ள முடியாது, குமட்டும். உணவில் கலக்கும்போதுதான் உப்பு ருசிக்கும்.


எந்த உணவிலும் கலந்து அதன் தன்மையை உப்பு மாற்றுவது போல, செய்கின்ற ஒரு செயலிலே உணர்வாக இணைந்து கலக்க வேண்டும். அப்போது அந்தச் செயலே நாமாகி விடுவோம். வெற்றி இயல்பாகக் கிடைக்கும்.

## தெளிவாக இருங்கள்!

ஆயிரம் கிலோமீட்டர் தூரத்துக்கு அப்பால் இருக்கும் இலக்கைக்கூட, துல்லியமாகச் சென்று தாக்கும் ஏவுகணைகள் உண்டு. அதுபோல உங்கள் இலக்கு எது என அறிந்து, அதை நோக்கிச் செல்வது முக்கியம். இலக்கு எங்கோ இருந்தாலும், அதை நோக்கிய பயணம் குறித்து உங்களுக்குத் தெளிவு வேண்டும்.

உங்கள் வெற்றிக்காக நீங்கள் மட்டுமே தனியாக உழைக்க வேண்டும் என்பதில்லை. மற்றவர்களைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்களுக்குச் சரியாக வராத ஒரு விஷயத்தில், மற்றவர்களின் உதவியைக் கேட்கலாம். இதில் தப்பில்லை. அதை யார் சரியாகச் செய்வார்கள் என்று பார்த்து, அவர்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்வதில்தான் உங்கள் புத்திசாலித்தனம் இருக்கிறது.





## குறி வைத்தால் இரை கிடைக்கும்!

'மந்திரத்தால் மாங்காய் விழாது' என்பார்கள். ஆனால் மாங்காயை வீழ்த்துவதற்குப் பல வழிகள் உண்டு. இலக்கே இல்லாமல் மாமரத்தில் கல் எறிந்தால், ஏதோ ஒரு மாங்காய் விழும். அது முற்றியதோ, பிஞ்சோ, செங்காயோ, கிடைத்ததில் திருப்தி அடைய வேண்டியதுதான். இலக்கற்று முயற்சி செய்பவர்களுக்கு இப்படித்தான் ஏதோ ஒன்று கிடைக்கும். சிலர் இதைக்கூடச் செய்யமாட்டார்கள். மாமரத்தின் அடியில் உட்கார்ந்து, 'ஏதாவது மாங்காய் விழுகிறதா' எனக் காத்திருப்பார்கள். அணில் கடித்தோ, பறவைகள் கொத்தியோ, காற்றில் உதிர்ந்தோ ஏதேனும் விழும். அது திருப்தி தராது.

வெகு சிலர் மட்டுமே தெளிவாக, தாங்கள் விரும்பும் மாங்காயைக் குறிவைத்துக் கல் எறிகிறார்கள். தொடர் முயற்சியில் அது கண்டிப்பாகக் கிடைக்கும்.



# வெற்றி மொழிகள்!

- சதுரங்க ஆட்டத்தில் முன்னால் நகர்ந்து போவதால் மட்டுமே வெற்றி கிடைத்துவிடாது. சில நேரங்களில் பின்வாங்கவும் வேண்டியிருக்கும். இதை உணர்ந்தால், வெற்றி எளிது.
- தடைகள் குறுக்கிடும்போது, இலக்கை அடைவதற்கான உங்கள் திசையை மாற்றுங்கள். இலக்கை அடைய வேண்டும் என்ற உங்கள் தீர்மானத்தை மாற்றாதீர்கள்.
- இன்றைய தினம் கடினமாக இருக்கலாம்; நாளை மோசமாக இருக்கலாம். ஆனால், நாளைய மறுதினம் பிரகாசமாக மாறக்கூடும். வெற்றிக்கான நம்பிக்கையை எப்போதும் இழக்காதீர்கள்.
- ஒரு கடினமான சூழலை எப்படிச் சமாளிப்பது என யோசிக்காதீர்கள். எப்படிப்பட்ட சூழல்களிலும் நம்மை எப்படிக் கையாள்வது என யோசியுங்கள். எப்போதும் வெற்றி பெறலாம்.
- உங்களால் வெற்றியைக் கற்பனை செய்ய முடிந்தால், உங்களால் அதை அடைய முடியும். வெற்றி குறித்து கனவு காண முடிந்தால், உங்களால் அதுவாகவே ஆக முடியும்.
- சரியான மனநிலையுடன் இலக்கை நோக்கிப் பயணம் செய்தால், ஒருபோதும் தப்பான இடத்துக்கு நீங்கள் போய்விட மாட்டீர்கள்.
- வெற்றிபெற விரும்பினால், நீங்கள் செய்யும் செயலை அறிந்து செய்யுங்கள், நீங்கள் செய்வதை நேசித்துச் செய்யுங்கள், நீங்கள் செய்வதை நம்பிக்கையுடன் செய்யுங்கள்.
- தேடாதபோது கிடைப்பதும், தேடும்போது தொலைவதும்தான் வாய்ப்பின் இயல்பு. அதை உணர்ந்து தேடுங்கள்.
- வாழ்க்கையில் யாரையும் ஏமாற்றி ஜெயிக்கக்கூடாது. ஆனால், ஏமாற்றியவர்களை ஜெயிக்காமல் விடக்கூடாது.
- தோல்வி வருவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், வெற்றி வருவதற்கு ஒற்றைக் காரணமாகக் கடும் உழைப்பு இருக்கும்.
- எப்போதும் வெற்றியை அடைவதற்கு உன்னதமான வழி, பின்னடைவுக்குப் பிறகும் இன்னும் ஒருமுறை முயற்சி செய்து பார்க்கலாம் என்று நினைப்பதுதான்.
- ஆபத்துகளை எதிர்கொள்ளாமல், உயர்ந்த வெற்றிகள் எதையும் நம்மால் அடைய முடியாது.
- வெற்றியடைவதற்கு நாம் முதலில் நம்மால் முடியும் என்று நம்ப வேண்டும்.
- தவறான பாதையில் வேகமாகச் செல்வதைவிட, சரியான பாதையில் மெதுவாகச் செல்லுங்கள்.
- உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர்ந்த வெற்றி எதையும் சாதிக்க முடியாது.
- நீங்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு பிரச்னையிலும் ஒரு வாய்ப்பு ஒளிந்திருப்பதை உங்களால் பார்க்க முடிகிறதா? அப்படியானால் நீங்கள் வெற்றியாளர்தான்.
- நீங்கள் செய்யும் எந்தச் செயலையும் விருப்பத்துடன் செய்தால் வெற்றி நிச்சயம். எந்தவொரு மனிதரும் தான் விரும்பாத ஒரு முயற்சியில் வெற்றியடைய முடியாது.
- பிறரைவிட அதிகமாகத் தெரிந்துகொள்ளுங்கள், பிறரைவிட அதிகமாக உழைக்கத் தயங்காதீர்கள், பிறரைவிடக் குறைவாகவே எதிர்பார்ப்பு வையுங்கள். உங்கள் வெற்றி நிச்சயம்.
- வெற்றி பெற்ற ஒருவரையும், வெற்றி வாய்ப்பை இழந்த இன்னொருவரையும் வேறுபடுத்துவது, விடாமுயற்சி மட்டுமே!
- நம்மை நிராகரிக்கும் இடத்தில் நம் கோபத்தைக் காட்டுவதை விட, திறமையைக் காட்டி ஜெயித்து நிரூபிப்பதே மிகச்சிறந்த பதிலடி.
- சிறிய வெற்றிகளைத் தேடி அடையுங்கள். ஒவ்வொரு சிறிய வெற்றியும் உங்களுக்கு நம்பிக்கையைத் தரும். இந்தச் சிறிய வெற்றிகள் உங்களைப் பெரிய வெற்றிகளை நோக்கி அழைத்துச் செல்லும்.


RAMRAJ
The Brand Trust Report - India Study 2021
Power of Trust
India's Most Trusted
Dhotis Brands
LITTLE STARS®
KIDS DHOTIS • SHIRTS • KURTAS
Available at Ramraj Showrooms & All leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in




Available at Ramraj Showrooms & All leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in



The Brand Trust Report - India Study 2021
Power of Trust
India's Most Trusted
Dhotis Brands
Culture India™
TRADITIONAL KURTAS ● DHOTIS
BY
RAMRAJ©
Shop Online @ www.ramrajcotton.in






Shop Online @ www.ramrajcotton.in

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



‘உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்’ என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.


**வெண்மை**

ராம்ராஜ் வி டவர்,

10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,

திருப்பூர்-641 604.

email: venmaii@ramrajcotton.net


சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.

போன்:

0421-4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

**ஒரு வருட சந்தா:** ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | **2 வருட சந்தா:** ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

**ஒரு வருட சந்தா:** ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | **2 வருட சந்தா:** ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**

# எப்போதும் ஜெயிக்கலாம்!

ஒரு மரத்தில் மொட்டு விடும் அத்தனை அரும்புகளும் பழமாக முடிவதில்லை. மொட்டாகவே சில உதிர்ந்துவிடும். பூத்த பிறகு சில வாடிப் போகும். காற்றின் வேகம் தாங்காமல் சில விழுந்துவிடும். பூவிலிருந்து காயை நோக்கிய பயணத்தில் பிஞ்சாக இருக்கும்போதே சில சூம்பிப் போகும். அணிலோ, பறவைகளோ சிலவற்றைக் கொத்தித் தின்னும். இந்த எல்லாவற்றிலும் தப்பிப் பிழைப்பதே கனிந்து இனிய பழமாக மாறும்.

வெற்றியை நோக்கிய பயணமும் இப்படிப்பட்டதுதான். அந்தப் பயணத்தை எப்படித் துவக்குவது, எந்தப் பாதையில் தொடர்வது, யார் யாரெல்லாம் அதில் இணைந்திருக்கலாம், நாம் போகும் பாதை சரியானதுதானா என்பதை உணர்ந்து வெல்ல சில வழிகள்...

- ஒரு செயலைச் செய்ய நினைத்தால், அதை எப்படியும் செய்து முடிப்பதில் உறுதியாக இருக்க வேண்டும். எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருப்பவர்கள், எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.
- எதைச் செய்வது, எப்படிச் செய்வது, அதன் விளைவுகள் என்ன என்று நன்றாகச் சிந்தித்த பிறகே ஒரு செயலில் இறங்க வேண்டும். இறங்கிய பிறகு சிந்திக்கலாம் என்பது தவறு. எந்த ஊருக்குச் செல்ல வேண்டுமோ, அந்தப் பேருந்தில்தான் ஏற வேண்டும். ஏதோ ஒரு பேருந்தில் ஏறி, அது போகும் ஊரில் போய் இறங்குவதற்குப் பெயர் பயணம் அல்ல!
- பாதை தெரியாத பயணி ஊர் போய்ச் சேர முடியாது. கண்மூடித்தனமாகவோ, அரைகுறையான புரிதலுடனோ ஒரு செயலைச் செய்ய முடியாது அல்லவா? நமக்குத் தெரியாத ஒரு விஷயத்தையும் செய்ய முடியாது அல்லவா? எனவே, எதைச் செய்வதாக இருந்தாலும், அதைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இப்படி எதையும் அறிந்து முயற்சி மேற்கொண்டால் முடியாதது எதுவுமில்லை.
- அரைக்கிணறு தாண்டியவர்கள் பற்றி ஆயிரம் கதைகள் இங்கு உண்டு. அவர்கள் கால்கள் தாண்ட நினைக்கும் தூரத்தை முதலில் மனம் தாண்ட வேண்டும். மனதால் தாண்ட முடியாதவர்கள், தடுமாறி விழுந்துவிடுகிறார்கள். 'முடியும்' என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால், எவரும் சிகரத்தில் ஏறலாம்.
- எதை எப்போது எப்படிச் செய்ய வேண்டும் என்ற தெளிவு வேண்டும். சில செயல்களை நிதானமாகச் செய்யலாம் என்றால், அவற்றைச் செய்ய காலம் தாழ்த்துவதில் தவறில்லை. ஆனால் விரைவாகச் செய்ய வேண்டிய காரியங்களில் தாமதம் கூடாது. ஒரு நிமிடத்தின் அருமை, அந்த ஒரு நிமிடத் தாமதத்தில் நீண்ட பயணத்துக்கான ரயிலைத் தவற விட்டவர்களுக்கே புரியும்.



- எந்தச் செயலுக்கும் ஐந்து விஷயங்கள் அவசியம். தேவையான பொருட்கள் என்ன, தேவையான கருவிகள் கிடைக்கிறதா, அதைச் செய்யும் காலம் சரியானதுதானா, அதைச் செய்யப் போகும் செயல்முறை அதற்கு ஏற்றதுதானா, அதைச் செய்யப் போகும் இடம் அதற்கு உகந்ததுதானா என்பவையே அந்த ஐந்து விஷயங்கள். தண்ணீரே கிடைக்காத பாலைவனத்தில் அதிக தண்ணீர் தேவைப்படும் தொழில் செய்ய முடியாது. மழை நாட்களில் செங்கல் சூளை போடுவது போன்ற அபத்தம் எதுவுமில்லை. இப்படி எல்லா விஷயங்களையும் யோசிக்க இந்த ஐந்து விதிகள் உதவும்.
- செய்யும் ஒரு செயலில் பெரும் ஆதாயம் கிடைக்கும் என்றுகூட இருக்கட்டும். அதற்காக கையில் இருக்கும் எல்லாப் பணத்தையும் அதில் முதலீடு செய்வது சரியல்ல. ஒருவேளை ஏதேனும் விபரீதம் நிகழ்ந்தால், முதலீடு மொத்தமும் காணாமல் போகும். இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யக்கூடாது.
- இந்தச் செயலைச் செய்வதற்கு இதுதான் வழி என ஒரு நியதி இருந்தால், அதன்படியே முறையாக முயற்சி செய்ய வேண்டும். இல்லாவிட்டால், எத்தனை பேர்தான் துணையாக இருந்தாலும், அந்த முயற்சி இறுதியில் முடங்கிப் போய்விடும்.
- ‘நம்மால் முடியும்’ என்ற தன்னம்பிக்கை இருக்க வேண்டியதுதான். ஆனால் அந்தத் தன்னம்பிக்கை அதீதமாகி, நம் பார்வையை மறைத்துவிடக்கூடாது. தன்னைப் பற்றி அதிகமாகக் கணக்குப் போட்டுக் கொண்டு எல்லை மீறிப் போகிற ஒருவர், நுனிக் கிளையில் ஏறியவர் அதற்கு மேலும் ஏறிட முயற்சி செய்தால் என்ன ஆவாரோ அந்தக் கதிக்கு ஆளாவார்.
- எல்லாம் இருந்தாலும், எத்தனை பேர் உதவி செய்தாலும், சிலர் மட்டும் தங்கள் முயற்சிகளில் தோற்றுக்கொண்டே இருக்கிறார்கள். இதற்குக் காரணம், மனதில் உறுதி இல்லாததுதான். மற்ற எல்லாம் இருந்தாலும், ஒருவரது மனதில் உறுதி மட்டும் இல்லாவிட்டால் அவரது செயலிலும் உறுதி இருக்காது. அந்தச் செயலும் சிறக்காது.
- முயற்சி செய்கிற ஒருவரின் குணங்களே அவரை ஜெயிக்க வைக்கின்றன. தான் நினைக்கும் எதையும் சொல்லி எவரையும் ஈர்க்கும் ஆற்றல் படைத்தவராகவும், சோர்வு அறியாதவராகவும், அஞ்சா நெஞ்சம் கொண்டவராகவும் இருப்பவரை எவராலும் வெல்ல முடியாது.
- சரியான செயலையும் தவறான இடத்தில் செய்து தோற்பவர்கள் உண்டு; தவறான செயலையும் சரியான இடத்தில் செய்து வெல்பவர்கள் உண்டு. எதை எங்கு செய்ய வேண்டும் என்ற அடிப்படைப் புரிதல் எப்போதும் அவசியம்.
- தொழிலுக்காகக் கடன் வாங்குபவர்கள், அதைத் திருப்பிச் செலுத்தும் வழியையும் அறிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இழப்புகளைத் தவிர்க்க முடியாது. எல்லோருக்கும் சாத்தியமில்லை என்றாலும், சொந்தப் பணத்தை நம்பிச் செயலில் இறங்குவதைப் போலப் பாதுகாப்பான விஷயம் வேறு எதுவும் இல்லை. அது கடன் குறித்த பதற்றத்தைக் குறைத்துவிடும். ●


வெண்மை
சந்தா...

# மகளிர் தின சிறப்புச் சலுகை!



மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

**ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~200~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/–**

**இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/–**

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)

# திறமையால் வெற்றி அடையலாம்!



படிப்பு, வேலை, தொழில், வியாபாரம், வாழ்க்கை என்று எதிலும் வெற்றிக்கு முதன்மையாக எது தேவை? 'இதைச் செய்து முடிக்க வேண்டும்' என்று நாம் நிர்ணயித்துக்கொள்ளும் ஓர் இலக்குதான். அதுதான் நம்மை முன்னோக்கி வழிநடத்தும்.

இலக்கு இல்லாமல் மனம் போன போக்கில் வாழ்வது அபாயகரமானது. நடுக்கடலில் ஒரு படகில் தனியாக இருக்கும் மனிதனை நினைத்துக்கொள்ளுங்கள். அவன் கையில் துடுப்பு இல்லை. அந்தப் படகை அவன் விரும்பிய திசையில் அவனால் செலுத்த முடியாது. அலைகளும் காற்றும் அதை அலைக்கழித்து எந்தத் திசையில் நகர்த்துகிறதோ, அந்தப் பக்கம்தான் அவனால் போக முடியும். கையில் துடுப்பு இல்லாததால், படகு அவன் கட்டுப்பாட்டில் இல்லை.

அந்தப் படகுதான் நம் வாழ்க்கை என்றால், படகோட்டி கையில் இருக்கும் துடுப்புதான் இலக்கு. நம்மை சலனப்படுத்த ஏராளமான விஷயங்கள் வந்துவிட்ட இந்தக் காலத்தில், அவை எதிலும் சிக்கிக்கொள்ளாமல் நினைத்த பாதையில் செல்வதற்கு நமக்கு நல்லதொரு இலக்கு தேவை. வாழ்வில் தமக்கென இலக்கு வைத்திருப்பவர்கள், ஒவ்வொரு நாளையும் தாங்கள் நினைத்த விதத்தில் வாழ்கிறார்கள். மற்றவர்களோ, காலம் இழுத்துச் செல்லும் திசையில் போகிறார்கள்.

இலக்கு இருக்கும்போது எப்படி வாழ வேண்டும்? 'நான் எல்லாவற்றிலும் திறமைசாலி ஆகப் போகிறேன்' என்று சகல திசைகளிலும் ஓடக்கூடாது. அது வெற்றியைத் தராது. உதாரணமாக, சில தெருநாய்களைப் பார்த்திருப்பீர்கள். தெருவில் எந்த வாகனம் வந்தாலும் துரத்திக்கொண்டு அதன் பின்னால் ஓடும். கொஞ்ச தூரம் போய்விட்டுச் சோர்வுடன் திரும்பும். எல்லா வாகனங்களையும் தன்னால் முந்திவிட முடியும் என்று அது நினைக்கிறது. கடைசியில் அதனால் எதையுமே முந்த முடிவதில்லை.

பல விஷயங்களைச் செய்ய ஆசைப்படும் ஒருவர் ஜெயிப்பதில்லை. தான் எதில் திறமைசாலி என்பதை உணர்ந்து அதை மட்டுமே செய்ய ஆரம்பிக்கும்போதுதான் ஒருவர் வெற்றியின் பாதையில் போகிறார்.

'என்னால் எதுவும் செய்ய முடியும்' என்று செயல்படுவது ஒருவித போதை. அதில் ஒருவருக்கு எப்போதுமே தெளிவு கிடைக்காது. அப்படி நீங்கள் பல விஷயங்களைச் செய்யத் தெரிந்தவராக இருக்கலாம். ஆனால், அவை எல்லாவற்றிலும் சுமாரான திறமை பெற்றவராக இருப்பீர்கள். ஒவ்வொன்றிலும் சிறந்த திறமை பெற்ற வேறு யாரோ ஒருவர், உங்களை முந்திப் போய்க்கொண்டே இருப்பார். அது உங்களுக்குப் பெரும் மன உளைச்சலையும் சோர்வையும் கொடுக்கும். உங்கள் கவனம் சிதறும்.

நூறு விஷயங்களில் வெற்றிபெற ஆசைப்படாதீர்கள். உங்களுக்கு எதில் மிகச் சிறந்த திறமை இருக்கிறது என்பதைக் கண்டுபிடியுங்கள். அந்தத் திறமையை இன்னும் இன்னும் கூர்மைப்படுத்திக்கொள்ளுங்கள். அந்த ஒற்றைச் செயலில் ஒரு சவாலான இலக்கை ஏற்படுத்திக்கொண்டு உழைக்கத் தொடங்குங்கள். நிச்சயம் வெல்வீர்கள்.

ஏராளமான விஷயங்களில் சராசரியான திறமையுடன் இருப்பவர்களைவிடவும், ஏதேனும் ஒற்றை விஷயத்தில் மிகச் சிறந்த திறமைசாலியாக இருக்கும் ஒருவருக்கே வாய்ப்புகளும் வெற்றிகளும் அதிகம் கிடைக்கின்றன. ●

# 10 வெற்றி குணங்கள்



- வெற்றிக்கு முதலில் தேவை நம்பிக்கை. 'திறமையுள்ள சிலரால் மட்டுமே இதைச் செய்ய முடியும், என்னால் முடியாது' என்று நினைப்பது தவறு. உங்களை நீங்களே நம்பாவிட்டால் யார் நம்புவார்கள்? 'என்னால் முடியும்' என்ற மந்திரம் பல மாயங்களைச் செய்யும். நம்பிக்கையுடன் செய்யுங்கள்.
- ஒவ்வொரு வெற்றியாளரும் தங்கள் உழைப்பால்தான் உயரங்களை எட்டிப்பிடித்தார்கள். சோம்பேறித்தனமாக இருப்பவர்களை வெற்றி நெருங்காது. சோம்பலை உதறித் தள்ளிவிட்டு உண்மையான உழைப்பைக் கொடுங்கள்.
- சிலருக்கு அதிர்ஷ்டம் பல வாய்ப்புகளைக் கொடுத்திருக்கலாம். எனக்கும் அப்படி அதிர்ஷ்டம் வரும் என்று காத்திருக்காதீர்கள். உழைக்காதவர்களையும், முயற்சி செய்யாதவர்களையும் அதிர்ஷ்டம் நெருங்கிப் பார்ப்பதில்லை.
- பயமே பலரையும் கட்டிப் போடுகிறது. நான் செய்வது சரியா? இந்த முயற்சியில் நான் தோற்றுப் போய்விட்டால் என்ன ஆவது? இவர் என்ன நினைப்பார்? அவர் என்ன சொல்வார்? இப்படிக் கேள்விகளை எழுப்பிப் பயந்து பயந்து எதையும் அரைகுறையாகச் செய்கிறார்கள் பலர். முழுமுயற்சியே பயத்தைத் துரத்தி ஜெயிக்க வைக்கும்.
- எதிர்மறையாகவே சிந்திப்பவர்கள், எதிர்மறையாகவே பேசுபவர்கள் என ஒருவரின் வெற்றியைக் கெடுக்க இங்கே ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யாரும் உங்களை நெருங்கவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். வெற்றியாளர்களின் அருகில் இருங்கள். அவர்களின் சொற்களைக் கேளுங்கள்.
- எதையுமே செய்வதற்கு முன்பு பல கோணங்களில் யோசித்தால் பயமே வரும். எந்த ஒரு செயலையும், அதன் நேர்மறை விளைவுகளால் மதிப்பிடுங்கள். 'இதை இப்படிச் செய்தால், இந்தவிதமான பலன் கிடைக்கும்' என்று சிந்தித்து இறங்கிவிடுங்கள். நீண்ட நேரம் யோசிப்பவர்களால் எந்தச் செயலிலும் ஜெயிக்க முடியாது.
- உங்கள் வெற்றிக்கோ, தோல்விக்கோ வேறு யாரோ காரணமாக இருக்க முடியும் என நினைக்காதீர்கள். அது முழுக்க முழுக்க உங்கள் கையில்தான் இருக்கிறது. நூறு சதவிகிதம் முயற்சி செய்தால், உங்கள் வெற்றியின் பாதையில் இருப்பவர்களை உங்களால் அகற்ற முடியும்.
- நேரத்தைத் திட்டமிடாதவர்களால் வெற்றியை நெருங்க முடியாது. நீங்கள் முக்கியமாகக் கருதும் செயலுக்கு உங்களின் மதிப்புமிக்க நேரம் செலவாக வேண்டும். பொன்னான நேரத்தை வீண் செய்யாதீர்கள்.
- சிறிதாகக் கனவு காணாதீர்கள். சின்னச் சின்ன சாதனைகளில் திருப்தி அடைந்துவிடாதீர்கள். 'பெரிய வெற்றிகளை என்னால் சாதிக்க முடியும்' என்ற நம்பிக்கையுடன் பெரிதாகக் கனவு காணுங்கள். நட்சத்திரங்களை இலக்கு வைப்பவர்களே நிலவையாவது எட்டிப் பிடிக்க முடியும்.
- நீங்கள் விரும்பாத ஒரு விஷயம் உங்களுக்கு எப்போதும் கிடைக்காது. படிப்பு, வேலை, தொழில் என எதையுமே விரும்பினால்தான் அது சிறப்பானதாகக் கிடைக்கும். அதேபோல வெற்றியையும் விரும்பித் தேடுங்கள். 'இந்த விஷயத்தில் மற்ற எல்லோரையும்விட நான் முதன்மையில் இருப்பேன்' என்ற நினைப்புடன் இருங்கள். விரும்பிய பாதையில் பயணம் செய்யுங்கள். வெற்றி உங்களுக்குத்தான்!






# கம்பன் கழக விழாவில் ராம்ராஜ்!

புதுச்சேரி மாநிலக் கம்பன் கழகத்தின் 58–ம் ஆண்டு விழா மே மாதம் 9, 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவின் நிறைவு நாளில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. K.R. நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். புதுச்சேரிக் கம்பன் கழகத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.செல்வகணபதி, செயலாளரும் முன்னாள் புதுச்சேரி சபாநாயகருமான திரு.சிவக்கொழுந்து, பொருளாளர் பழனி அடைக்கலம் ஆகியோர் அவரை வரவேற்று மரியாதை செய்தனர்.

'கம்ப ராமாயணத்தில் நிர்வாக உத்திகள்' என்ற தலைப்பில் விழாவில் சிறப்புரையாற்றிய திரு.K.R. நாகராஜன் அவர்கள், கம்ப ராமாயணத்தைப் படித்து, அதிலிருந்து தான் கையாண்டு வரும் உத்திகள் குறித்து எடுத்துரைத்தார். அவை எப்படித் தனக்கு நிர்வாகரீதியாக உதவுகின்றன என்றும் விளக்கினார். விரைவில் அயோத்தியில் கம்பனுக்கு மணிமண்டபம் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மூன்று நாட்கள் நடைபெற்ற இவ்விழாவில் தமிழகம் முழுவதிலும் இருந்து தமிழறிஞர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# யோகா பயிற்சி வகுப்பில் ராம்ராஜ்!



அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் பொள்ளாச்சி அருகில் உள்ள ஆழியாற்றில் உலக சமுதாய சேவா சங்கம் சார்பில் அறிவுத் திருக்கோயிலை நிறுவியுள்ளார். இங்கு மாணவர்களுக்கான பதின் பருவ மனவளக்கலை யோகா பயிற்சி வகுப்புகள் மே மாதம் 2–ம் தேதி முதல் 11–ம் தேதி வரை சிறப்பாக நடைபெற்றன.

இந்த யோகா பயிற்சி முகாமில் மே 9–ம் தேதி அன்று ராம்ராஜ் காட்டன் நிறுவனர் – தலைவர் திரு.K.R.நாகராஜன் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களிடையே சிறப்புரையாற்றினார். ‘‘மாணவர்களின் கல்வித் திறனோடு, பண்பாட்டுத் திறனையும் மேம்படுத்தும் இந்தப் பயிற்சி வகுப்புகளை முறையாகப் பயன்படுத்திக்கொண்டு மாணவர்கள் வாழ்க்கையில் உயர வேண்டும். இந்தப் பயிற்சிகள் மாணவர்களின் கவனிக்கும் திறனையும் நினைவாற்றலையும் மேம்படுத்தும். பயிற்சிக் காலத்திற்குப் பின்னரும் இந்தப் பயிற்சிகளைத் தொடர்ந்து வாழ்க்கை முழுக்கச் செய்து வரும்பொழுது மாணவர்களின் வாழ்க்கைத் தரம் உயரும். கல்வியும் ஒழுக்கமும் இரண்டு கண்களைப் போன்றவை. எனவே இரண்டுக்கும் சமமான முக்கியத்துவம் கொடுத்து வாழ்க்கையில் அனைவரும் வெற்றி பெற வேண்டும்” என்று அவர் மாணவர்களை வாழ்த்திப் பேசினார்.

இந்த முகாமில் 500 மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சிகளை மேற்கொண்டனர்.

# வெற்றிக்காகக் காத்திருங்கள்!

கனவுகளுக்கும் சாதனைகளுக்கும் இடையே உள்ள ஒரே வித்தியாசம், கடின உழைப்பு மட்டுமே. ஒரு விதை முட்டி மோதி முளைத்து, செடியாகி, மரமாகி, பூத்து, காய்த்து, பிறகு கனி தருவது என்பது ஒரே நாளில் நடந்துவிடுவதில்லை. ஒரு முயற்சியும், அதற்காக செலுத்தும் உழைப்பும் நல்ல பலனாகத் திரும்பக் கிடைப்பதற்குக் காத்திருக்கத்தான் வேண்டும்.

சரி, எத்தனை நாட்களில் வெற்றி கிடைக்கும்? உங்கள் இலக்கு எது என்பதைப் பொறுத்தது அது. தர்ப்பூசணி சில வாரங்களில் பழுத்துப் பலன் தரும்; மாமரம் இதைச் செய்ய ஆண்டுகள் சில ஆகும். இப்படி ஒவ்வொரு வெற்றியும் வித்தியாசமானவை. வெற்றியின் தன்மைக்கு ஏற்ப, அந்த வெற்றியை அடையும் காலமும் மாறுபடுகிறது. ஆனால், உடனடி வெற்றியைப் பெறுவதற்குச் சிலர் முயற்சி செய்வதுண்டு.

புகழ்பெற்ற ஜென் கதை ஒன்று உண்டு. ஒரு மன்னனுக்கு திடீரென 'ஞானியாக வேண்டும்' என ஆசை வந்தது. 'உலகத்தின் வரலாறு முழுவதையும் தெரிந்துகொண்டால் ஞானியாகிவிடலாம்' என அவனுக்கு யாரோ ஆலோசனை சொன்னார்கள்.

தனது அமைச்சரவையில் இருக்கும் அறிஞர்கள், புலவர்கள் மற்றும் வரலாற்று ஆசிரியர்களை அழைத்தான். உலக வரலாற்றை எழுதித் தரும்படி கட்டளையிட்டான். மாதங்கள் கடந்தன. ஆயிரக்கணக்கான சுவடிகளில் உலக வரலாற்றை எழுதி அவர்கள் எடுத்து வந்தார்கள். மன்னன் அதிர்ச்சியடைந்தான். "இவ்வளவையும் படித்து முடிக்க என் ஆயுளே போதாது. சுருக்கமாக எழுதித் தாருங்கள்" என்றான் மன்னன். "இதை சுருக்குவது கடினம்" என அறிஞர்கள் சொன்னார்கள். ஆனால் மன்னன் தன் பிடிவாதத்தைக் கைவிடவில்லை.

அறிஞர்களும் புலவர்களும் ஒரு ஜென் குருவைச் சந்தித்து ஆலோசனை கேட்டார்கள். "உலக வரலாற்றை மிகவும் சுருக்கமாக நான் எழுதித் தருகிறேன்" என்று சிரித்தபடி சொன்ன அவர், ஒரு சுவடியில் சில வார்த்தைகள் எழுதி அவர்களிடம் கொடுத்தார். அவர்கள் அதை எடுத்துச் சென்று மன்னனிடம் கொடுத்தனர். மன்னன் பிரித்துப் படித்தான். அந்தச் சுவடியில், 'உலகில் மனிதர்கள் பிறந்தார்கள். வாழ்ந்தார்கள். இறந்துபோனார்கள்' என எழுதப்பட்டிருந்தது. நடந்ததை விளக்கிய அறிஞர்கள், "உலக வரலாற்றை மிகவும் சுருக்கமாக இப்படித்தான் எழுத முடியும் என்று அந்த ஜென் குரு சொன்னார்" என்றனர்.

'எந்த வெற்றியையும் பெறுவதற்கு முறையான வழிமுறைகளும், உரிய கால அவகாசமும் தேவை' என்பதை மன்னன் புரிந்துகொண்டான்.

'நேர்வழியில் பெறும் வெற்றியே நிரந்தரமானது' என்பதைப் புரிந்துகொண்டவர்கள் வாழ்க்கையில் எப்போதும் வெற்றி பெறலாம். உடனுக்குடன் பலன் எதிர்பார்ப்பது, உடனே பலன் கிடைக்காவிட்டால், சோர்ந்து விடுவது சிறுபிள்ளைத்தனம்.



வெற்றியை நோக்கிய பயணத்தில் ஒவ்வொரு நொடியும் முக்கியம். ஒலிம்பிக்கில் இதுவரை யாரும் வெல்லாத, இனிமேலும் யாரும் வெல்ல முடியாத அளவுக்குப் பதக்கங்களை வென்று குவித்தவர், நீச்சல் வீரர் மைக்கேல் ஃபெல்ப்ஸ். ஆனால் முதன்முதலில் போட்டியிட்டபோது அவருக்குக் கிடைத்தது தோல்விதான். சில நொடிகள் வித்தியாசத்தில் பதக்க வாய்ப்பை இழந்தார். “நொடிகளின் அருமையை எனக்குக் கற்றுத் தந்தது முதல் ஒலிம்பிக் போட்டிதான். சில நொடிகளைத் தவறவிட்டதால், அடுத்த ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்வதற்கு நான் நான்கு வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது” என்றார் அவர்.



தோல்விகள் என்பவை வெற்றிக்கான வழித்தடத்தை நோக்கிப் பயணிக்க உதவும் மைல்கற்கள். அந்தப் பயணத்தில், வேகத்தையும் உத்வேகத்தையும் இழந்துவிடக்கூடாது. உங்கள் அச்சத்தை உங்களுடனேயே வைத்துக்கொள்ளுங்கள்; ஆனால், உங்கள் தைரியத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு நாளையும் அறுவடைக்கான நாளென்று மதிப்பிடாதீர்கள்; ஒவ்வொரு நாளும் விதைப்பதற்கான நாளென்று எண்ணுங்கள். ஒரு நீண்ட வாழ்க்கைக்கும், ஒரு சிறந்த விருந்திற்கும் இடையேயான ஒரே வித்தியாசம், விருந்தில் இனிப்புகள் முதலில் பரிமாறப்படுகின்றன; வாழ்க்கையில் வெற்றியின் இனிப்பு நீண்ட முயற்சியின் இறுதியிலேயே கிடைக்கிறது.

‘வெற்றி’ என்பது ஒரே நாளில் கட்டி முடிக்கப்படும் கட்டடம் அல்ல. அது நாள்தோறும் செய்யும் சிறிய சிறிய முயற்சிகளால் உருவாக்கப்படும் ‘மாளிகை’ ஆகும். ஒருவர் செய்யும் செயல்களின் அடிப்படையில்தான் அவரது வெற்றி தீர்மானிக்கப்படுகிறது. வெளியிலிருந்து யாரோ தரும் உதவிகளால் மட்டுமே வெற்றி கிடைப்பதில்லை. அப்படி எதிர்பார்ப்பது, அஸ்திவாரம் இல்லாமல் மாளிகையை எழுப்புவது போன்ற அபத்தம் ஆகும்.

‘எனக்கு நல்ல பெற்றோர் அமைந்திருந்தால், நான் வாழ்க்கையில் வெற்றி பெற்றிருப்பேன்’, ‘சிறந்த ஆசிரியர்கள் பாடம் நடத்தியிருந்தால், என் வாழ்க்கை வேறு மாதிரி இருந்திருக்கும்’, ‘எங்கள் குடும்பத்தில் வறுமை இல்லாத நிலை அன்று இருந்திருந்தால், இன்று பெரும் கோடீஸ்வரனாக மாறியிருப்பேன்’... இப்படி தங்கள் வாழ்க்கை மீது பழி போட்டு, தாங்கள் தவறவிட்ட வாய்ப்புகளையும், இழந்த சூழல்களையும் எண்ணிப் பெருமூச்சு விடுபவர்களும் உண்டு.

வெற்றி என்பது வெளியில் இருந்து பிறர் தரும் ஆதரவினாலும் சாதகமான சூழலினாலும் மட்டுமே நிகழ்வதில்லை. உங்கள் மனம்தான் உங்களை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்கிறது. மனதுக்கும் வெற்றிக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது. மனதில் உருவாகின்ற எண்ணங்கள்தான், உங்கள் செயலை நெறிப்படுத்துகின்றன. ‘மனம் போல் வாழ்வு’ என்பதே உண்மை! ●

# வாசகர் கடிதங்கள்!

**மே** 2025 வெண்மை எண்ணங்கள் ‘சூழல் அறிவோம்’ சிறப்பிதழ் பக்கத்திற்குப் பக்கம் சிறப்பாக இருந்தது. ‘சூழலை உணர்ந்தால் வெற்றி’ – இளைஞர்களுக்குச் சிறந்த கட்டுரை. ‘சூழலை அறிந்த நிர்வாகி’ – தொழில்முனைவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். ‘சூழலை அறிந்து கேள்வி கேளுங்கள்’ கட்டுரை அனைத்து வயதினருக்கும் ஏற்றது. மொத்தத்தில் ‘வெண்மை எண்ணங்கள்’ இதழ், தமிழ் Readers Digest என்று போற்றும்படி அமைந்துள்ளது.

***- K.கணேசன், திருச்சி.***

**கோ**டையின் கடுமையைத் தணிக்க தமிழ்நாடு முழுக்க ஆங்காங்கே மழை பெய்கிறது. சூழலின் தன்மையை நமக்கு உணர்த்தும் மாமழையாக வெண்மை எண்ணங்கள் ‘சூழல் அறிவோம்’ சிறப்பிதழ் அமைந்திருந்தது.

***- சி.பாலசுப்பிரமணியன், சென்னை-78.***


**‘ந**ம் உடலை அறிவோம், மனதை அறிவோம், சுற்றி இருக்கும் மனிதர்களை அறிவோம். அப்போதுதான் நிறைவாழ்வு நமக்குக் கிடைக்கும்’ என்ற முத்தாய்ப்பான வரிகளுடன் வந்திருந்த ராம்ராஜ் காட்டன் நிறுவனர் கே.ஆர்.நாகராஜனின் கடிதம் சிறப்பான கருத்துகளின் தொகுப்பு.

***- வெ.சண்முகவடிவு, கருங்கல்பாளையம், ஈரோடு.***

# வெற்றிக்கு ஒரு சோதனை!

வெற்றியின் ஆணிவேர் தன்னம்பிக்கை. உங்களிடம் தன்னம்பிக்கை மிகுந்திருந்தால் எதிலும் வெற்றி பெறலாம். உங்கள் தன்னம்பிக்கையைச் சோதிக்க ஒரு சின்ன சோதனை. இங்கே கேட்கப்படும் கேள்விகளுக்கு ஒளிவுமறைவின்றிப் பதில்களை டிக் செய்யுங்கள்...

**1. உங்கள் உடல்வாகு எப்படிப்பட்டது?**



அ. கச்சிதமாக இருக்கிறது. பார்ப்பவர்கள் நிச்சயம் பொறாமைப்படுவார்கள். இந்தத் தோற்றத்தில் எனக்கு முழு திருப்திதான்!

ஆ. நன்றாகத்தான் இருக்கிறது. ஆனாலும் சில பிரச்னைகள் இருக்கின்றன. இன்னும் நல்ல தோற்றத்தில் என்னை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

இ. நான் நன்றாக இருப்பதாகவே நண்பர்கள் கூறுகின்றனர். ஆனால், அது உண்மையில்லை. என் தோற்றம் மோசமாக உள்ளது.

**2. நீண்ட நாட்களாகச் சந்திக்க விரும்பிய ஒருவரை எதிர்பாராதவிதமாகச் சந்திக்கிறீர்கள்? அப்போது...**



அ. ஏற்கனவே அறிமுகமானவர் போல அருகில் போய் அவருடன் இயல்பாகப் பேசத் தொடங்கிவிடுவேன்.

ஆ. அவர் அருகில் போய் அறிமுகம் செய்துகொண்டு பேசத் தொடங்கி, அவருக்கும் எனக்கும் நெருக்கம் ஏற்படுத்துவேன்.

இ. நான் ஏன் அவரிடம் போக வேண்டும்? அவர் என்னிடம் வந்து பேசட்டும் என்று காத்திருப்பேன்.

**3. உறவினர்களுடன் பழகுவதில் நீங்கள் எப்படி?**



அ. உறவுகள் முக்கியம். ஏதாவது கருத்து வேறுபாடுகள் எழுந்தாலும், நானே முதலில் போய்ப் பேசி விரிசலைச் சரி செய்ய முயல்வேன்.

ஆ. உறவு சுமுகமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் அவ்வப்போது சில பிரச்னைகள் வந்து போகின்றன.

இ. உறவுகள் என்றாலே தொல்லையும் துயரமும்தான். அவர்கள் என்னைப் புரிந்து கொள்வதே இல்லை.

**4. திடீரென உடல்நலமில்லாமல் போகிறது. படுக்கையில் விழுமளவுக்கு மோசமில்லை; சமாளிக்க முடியும் என்கிற நிலை. நீங்கள் என்ன செய்வீர்கள்?**



அ. தள்ளிப் போடாமல் உடனே நல்ல டாக்டரிடம் செல்வேன். உடல்நலம் நன்றாக இருந்தால்தானே வேலைகளைப் பார்க்க முடியும்!

ஆ. எளிமையான தடுப்பு மருந்துகளை எடுத்துக்கொண்டு, வேலைகளில் கவனம் செலுத்துவேன்.

இ. எல்லா வேலைகளையும் ஒத்திப் போடுவேன். 'என்ன பிரச்னையோ' எனக் கவலையில் ஆழ்ந்து விடுவேன்!

**5. நெருங்கிய நண்பர் ஒருவர் எதிர்பாராத துன்பத்தில் மாட்டிக்கொண்டால்..?**



அ. முதல் ஆளாக ஓடிப்போய் அவருக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்வேன்.

ஆ. அவருக்கு உடனே போன் செய்து, என்ன உதவி தேவைப்படுகிறது என்று கேட்பேன்.

இ. பொதுவான நண்பர் யாரையாவது தொடர்புகொண்டு, அவருக்குப் போய் உதவி செய்யுமாறு கேட்பேன்.

**6. உங்கள் வாழ்க்கை எப்படிச் செல்கிறது?**



அ. எனக்கு உண்மையான நண்பர்கள் அதிகம். அதனால் வாழ்க்கை உற்சாகமாகப் போகிறது.

ஆ. ஏதோ இருக்கிறேன். நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களால் எனக்கு எந்த உபயோகமும் இல்லை.

இ. ஒரு சந்தோஷமும் இல்லை. ஒவ்வொரு நாளும் போவதற்குள் 'போதும்... போதும்...' என்றிருக்கிறது.

**7. அலுவலகத்தில் ஒரு குழுவை வழிநடத்தும் பொறுப்புக்குத் தேர்வு செய்தால்?**



அ. உடனடியாக ஒப்புக்கொள்வேன். இப்படிப்பட்ட சவால்களே சாதிப்பதற்குக் கிடைத்த வாய்ப்பு.

ஆ. எனது வேலைகள் எப்படி இருக்கும் என்று கேட்டறிவேன். அதன்பிறகே யோசித்து முடிவு செய்வேன்.

இ. எதற்கு வீண் டென்ஷன்? யாராவது பார்த்துக்கொள்ளட்டும் என்று ஏதாவது சாக்குச் சொல்லி மறுத்துவிடுவேன்.

**8. அலுவலகத்தில் உங்களுக்குச் சம்பந்தம் இல்லாத ஒரு துறையில் ஒருவர் தன் வேலையை முடிக்க முடியாமல் திணறுகிறார். நீங்கள் என்ன செய்வீர்கள்?**



அ. எல்லாத் துறைகளின் வேலைகளும் எனக்குத் தெரியும். நான் போய் அவருக்கு உதவி செய்து, அந்த வேலையைச் சீக்கிரம் முடிக்க வைப்பேன்.

ஆ. என் வேலை நேரத்துக்குள் அவருக்கு முடிந்தால் உதவிகள் செய்வேன். நேரமாகிவிட்டது என்றால், அமைதியாக வீட்டுக்குக் கிளம்பிவிடுவேன்.

இ. எனக்குச் சம்பந்தம் இல்லாத வேலையில் நான் ஏன் தலையைக் கொடுக்க வேண்டும். அமைதியாக வேடிக்கை பார்ப்பேன்.

**9.உங்கள் துறையில் புதிதாக ஒரு தொழில்நுட்பம் அறிமுகம் ஆகியுள்ளது. அதைப் பற்றிப் பலரும் பேசுகிறார்கள். நீங்கள் என்ன செய்வீர்கள்?**



அ. முதல் வேலையாக அதைக் கற்றுக்கொள்வேன். என் துறையில் எல்லாம் தெரிந்தவராக நான் இருப்பது அவசியம்.

ஆ.அதுஎனக்குத்தேவைப்படுமாஎன்று விசாரிப்பேன். அவசியம் தேவைப்படும் என்றால் பார்த்துக்கொள்ளலாம்.

இ. எனக்குத் தெரியாதது இந்தத் துறையில் என்ன இருக்கிறது? அதை அலட்சியம் செய்வேன்.

**10. மொழி தெரியாத வேறு இடத்துக்கு உங்கள் வேலை அல்லது தொழில் விஷயமாகப் போக வேண்டிய சூழல். நீங்கள் என்ன செய்வீர்கள்?**



அ. அந்த மொழியின் அடிப்படையான வார்த்தைகளைத் தெரிந்துகொண்டு, இணையதளம் மூலம் பயிற்சிகள் எடுத்துக்கொண்டு கிளம்பிப் போவேன்.

ஆ. மொழி தெரியாமல் பழகுவதற்குக்கூட டெக்னாலஜி வந்துவிட்டதே! போய் சமாளித்துக்கொள்ளலாம் என்று கிளம்பிவிடுவேன்.

இ. எதுவும் தெரியாத இடத்தில் போய் என்ன செய்வது? நான் போக மாட்டேன். நம் ஊரில் இல்லாத வாய்ப்புகளா?

## நீங்கள் யார்?

கேள்விகளுக்கான மூன்று பதில்களில் 'அ' என்பதைத் தேர்வு செய்தால் 5 மதிப்பெண்கள். 'ஆ' என்பதைத் தேர்வு செய்தால் 4 மதிப்பெண்கள். 'இ' என்பதைத் தேர்வு செய்தால் 2 மதிப்பெண்கள். உங்கள் மதிப்பெண்கள்:

41–50 என்றால்: நீங்கள் தன்னம்பிக்கை மிகுந்தவர்தான். பாலைவன மணலில்கூடத் தண்ணீரைத் தோண்டி எடுக்கும் வல்லமை உங்களுக்கு உண்டு. தடைக்கற்களையும் படிக்கற்களாக்கி நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.

31–40 என்றால்: நீங்கள் எதுவும் நல்லதாகவே நடக்கும் என்று நம்புவீர்கள். அவ்வப்போது மனப் போராட்டங்களில் சிக்கித் தவித்தாலும், கடைசியில் சரியான பாதையில் திரும்பி விடுவீர்கள். சங்கடங்களைச் சமாளித்து விடுவீர்கள்.

30–க்குக் கீழே என்றால்: உங்களைச் சரிசெய்து கொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டது. வாழ்க்கையை அதன் போக்கில் விட்டு விட்டு, 'எதுவும் நல்லதாக நடக்கவில்லை' என விதியின் மீது பழி போடுவது இனியும் சரியில்லை. விதியை மாற்றும் மனவலிமையை உருவாக்கிக்கொள்ளுங்கள்.

ஒரு நாட்டின் மன்னர் தன் அமைச்சர்களை அழைத்து, வித்தியாசமான ஒரு கேள்வியைக் கேட்டார். "ஒருவர் வெற்றியடைந்திருக்கும் மகிழ்ச்சியான சூழலில் அவரிடம் ஒரு வாசகம் சொல்கிறீர்கள். வெற்றிக்களிப்பில் இருக்கும் அந்த நபர், அதைக் கேட்டவுடன் மனம் கலங்க வேண்டும். தோல்வியில் துவண்டு போயிருக்கும் ஒரு மனிதரிடம் அதே வாசகத்தைச் சொல்கிறீர்கள். தோல்வியடைந்த நபர் அதைக் கேட்டு மகிழவேண்டும். அப்படி என்ன சொல்வீர்கள்?" என்பதே மன்னர் கேட்ட கேள்வி.

பலரும் தலையைப் பிய்த்துக்கொண்டு யோசித்தார்கள். அப்போது மூத்த அமைச்சர் ஒருவர் எழுந்து, "மன்னா! வெற்றியடைந்தவனிடமும் தோல்வியடைந்தவனிடமும், 'இதுவும் மாறும்' என்ற வாசகத்தைச் சொல்ல வேண்டும். இந்த வார்த்தைகளைச் சொன்னால் போதும்... வெற்றி பெற்றவன் வருங்காலத்தை நினைத்து அஞ்சுவான். தோல்வியடைந்தவன் மனம் தெளிந்து, நம்பிக்கை பெற்று மகிழ்ச்சி அடைவான்" என்றார். மன்னர் அந்த அமைச்சரைப் பாராட்டிப் பரிசுகளைத் தந்து கௌரவித்தார்.

'உங்கள் வாழ்வு உன்னதமாக மாற வேண்டும் என்றால், உங்கள் முன்னுரிமைகள் எவையோ, அவை மாற வேண்டும்' என்பது ஒரு புகழ்மிக்க வாசகம். வெற்றியை இதைவிட எளிமையான வார்த்தைகளால் புரிய வைத்துவிட முடியாது. தேர்வு, வேலை, தொழில், வாழ்க்கை என எதிலுமே வெற்றி என்ற தராசை வைத்தே மனிதர்கள் அளவிடப்படுகிறார்கள். அதில் எப்போதும் மதிப்பு பெறுவதற்குச் சில விஷயங்களைச் செய்யுங்கள்:

**நேர்மறையாகப் பேசுங்கள்:** 'இந்த உலகிலேயே நான்தான் பரிதாபத்துக்குரிய ஜீவன்', 'எனக்கு நேர்ந்தது போல யாருக்கும் கஷ்டம் வரக்கூடாது' என உங்களைப் பற்றி நீங்களே கழிவிரக்கம் கொள்ளாதீர்கள். மற்றவர்களும் உங்கள் மீது பரிதாபமோ, அனுதாபமோ காட்ட அனுமதிக்காதீர்கள். உங்களைப் பற்றி, உங்கள் வெற்றி பற்றி, உங்கள் எதிர்காலம் பற்றி, எப்போதும் நேர்மறையாகப் பேசுங்கள். உங்கள் பலத்தையும் பண்புகளையும் பிறரிடம் வெளிப்படுத்தத் தயங்காதீர்கள். இப்படிச் செய்யும்போது உங்கள் மனமும் உங்களை வெற்றியை நோக்கி நகர்த்துகிறது.

**மனதால் பெறுங்கள்:** உங்களை யாராவது பாராட்டும்போதோ, நன்றி சொல்லும்போதோ, அதை வெறுமனே காதுகளால் வாங்கி, அங்கேயே மறந்து விடாதீர்கள். உங்கள் மனதால் அதை முழுமையாக வாங்குங்கள். மனதுக்கு அது மிகவும் தேவைப்படுகிறது.

# மதிப்பான வெற்றியை அடையுங்கள்!



**புன்னகை அணியுங்கள்:** உங்கள் முகத்தில் வெளிப்படுத்தும் உணர்வுகளே, உங்கள் மூளையின் சில பகுதிகளைத் தூண்டிவிட்டு மனநிலையைக் கட்டுப்படுத்துகின்றன என ஆய்வுகள் சொல்கின்றன. தினமும் கண்ணாடி முன் சில நிமிடங்களாவது நின்று சிரியுங்கள்; உங்கள் புன்னகை முகத்தைப் பார்த்து உற்சாகம் அடையுங்கள். இந்த உற்சாகமே உங்களை வெற்றியை நோக்கிக் கூட்டிப் போய்விடும்.


**நம்பிக்கையாக நடியுங்கள்:** உங்கள் வெற்றியின் மீது அபார நம்பிக்கை கொண்டவராக இந்தச் சமூகத்தின் முன் நடியுங்கள். தோள்களை உயர்த்தி நடப்பது, நேர்கொண்ட பார்வையால் மற்றவர்களை அணுகுவது, கம்பீரமாக அமர்வது என உங்கள் செய்கைகள் உங்களை முழுமையான மனிதராகக் காட்டட்டும். இந்த நடிப்பை ஒரு கட்டத்தில் உங்கள் மனம் நம்பத் தொடங்கும். அதன்பின் உங்கள் மனநிலை நேர்மறையாக மாறும்.

**நேசிப்பவர்களிடம் பகிருங்கள்:** வெற்றியை நோக்கிய உங்கள் பயணத்தில் தடைகளும் தடுமாற்றங்களும் இருக்கவே செய்யும். நீங்கள் சந்திக்கும் பிரச்னைகளின் ஆணிவேர் என்ன என்பது குறித்து நண்பர்களிடமோ, உங்களை நேசிப்பவர்களிடமோ பேசுங்கள். சில பிரச்னைகளை உங்களால் தீர்த்துக்கொள்ள முடியும். அக்கறையானவர்களின் வழிகாட்டுதல் பல நேரங்களில் தேவைப்படுகிறது.

**திறமையைக் கண்டறியுங்கள்:** 'நான் எதற்குமே பயன்படாதவன்' என நினைக்கும் மனிதருக்குள்ளும் ஏதாவது ஒரு திறமை ஒளிந்திருக்கும். உங்களின் தனித்துவமான திறமை எது, பலம் என்ன என்பதைக் கண்டறியுங்கள். அதில் தனிக் கவனம் செலுத்தி மேன்மை அடையுங்கள். உங்களது அந்தத் திறமை குறித்துப் பெருமிதப்படுங்கள். திறமையை அடையாளம் காண்பவர்களே, அதை வைத்துச் சுலபமாக வெற்றியை அடைகிறார்கள்.

**நிறைவு அடையுங்கள்:** வெற்றிக்கு ஆசைப்பட வேண்டும். அதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், சாத்தியமில்லாத ஒரு விஷயத்துக்குப் பேராசைப்படக்கூடாது. பேராசை என்ற பேய்க்கு எல்லையே கிடையாது. நம்மிடம் இல்லாதவை பற்றிய நினைப்புகளும், அடுத்தவர்களுடனான ஒப்பீடுகளும், மேலும் மேலும் தாழ்வு மனப்பான்மையை வளர்க்கவே செய்யும். நிறைவற்ற, திருப்தி இல்லாத மனநிலையைத் துரத்துங்கள். அப்போதுதான் உங்கள் கவனம் முழுக்க வெற்றியை நோக்கி இருக்கும்.

**நெறிப்படி வாழுங்கள்:** வாழ்க்கையில் உங்களுக்கென்று சில கொள்கைகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். அந்த வரம்புகளுக்குள் உங்கள் வாழ்க்கை நெறியை அமைத்துக் கொள்ளுங்கள். 'உண்மையைச் சொல்லியே தொழில் செய்வேன்' என்று தீர்மானித்தால், நூறு சதவிகிதம் அதில் உறுதியாக இருங்கள். 'என் பணியில் விதிகளை மீறி எதையும் செய்ய மாட்டேன்' என்று முடிவு செய்தால், எந்தச் சூழலிலும் அதிலிருந்து பின்வாங்காதீர்கள். இப்படிப்பட்ட கொள்கைகள் நம்மைப் போன்ற மனிதர்கள் உருவாக்கியவைதான். உலகின் எல்லா மூலைகளிலும் இவற்றை இறுக்கமாகப் பின்பற்றுபவர்கள் உண்டு. யாரோ பலரால் செய்ய முடியும் என்றால், 'நம்மாலும் முடியும்' என நம்புங்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நெறி தவறினால், 'எதற்கும் வளைந்து விடும் ஆசாமி' என்ற முத்திரை உங்கள் மீது விழும். அது உங்கள் முன்னேற்றத்துக்கு ஆபத்தானது.




**அன்பு காட்டுங்கள்:** சுற்றி இருப்பவர்களிடம் நேசம் காட்டுங்கள். அன்பு என்ற அதிர்வலையை உங்களைச் சுற்றிலும் பரவ விடுங்கள். சிக்னலில் காத்திருக்கும் பார்வையற்றவர் சாலையைக் கடக்க உதவுவது, உங்களுக்கு காபி கொடுக்கும் பணியாளருக்கு நன்றி சொல்வது எனச் சின்னச்சின்ன விஷயங்கள்கூட அன்பின் வெளிப்பாடுதான். நீங்கள் வெளிப்படுத்தும் அன்பு, அவர்கள் வாழ்வில் நேர்மறை மாற்றங்களை ஏற்படுத்துகிறது. 'எங்கெங்கும் நேர்மறை எண்ணங்கள் பரவக் காரணமாக இருக்கிறோம்' என்ற நினைப்பே உங்களது தன்னம்பிக்கையை உயர்த்தி, வெற்றியை நோக்கி அழைத்துச் செல்லும்.

**துல்லியத்துக்கு ஆசைப்படாதீர்கள்:** மனிதர்கள் எல்லோருமே தவறு செய்யக் கூடியவர்கள். எனவே, நூறு சதவிகிதத் துல்லியத்தை உங்களிடமோ, உங்களைச் சுற்றி இருப்பவர்களிடமோ எதிர்பார்க்காதீர்கள். நிறைகள் அதிகமாகவும், குறைகள் கொஞ்சமாகவும்தான் பல விஷயங்களும் இருக்கும். இதைப் புரிந்துகொள்ளுங்கள். துல்லியத்தைத் தேடினால், 'நம்மால் இது முடியாதோ' என்ற நினைப்பு தோன்றும். அது உங்கள் வெற்றியைத் தடுத்துவிடும். ●

## வாழ்க்கையில் வெற்றி வாய்க்கும்!



வாழ்வில் எல்லோருமே பலவிதமான பாத்திரங்களை ஏற்கிறார்கள். பெற்றோருக்கு மகனாக, உடன்பிறந்தவர்களுக்குச் சகோதர உறவாக, வாழ்க்கைத்துணைக்கு ஒரு துணையாக, உறவுகளுக்கு உறவினராக, நண்பர்களுக்கு நண்பராக, அலுவலகத்தில் அல்லது தொழிலில் கொடுக்கப்பட்ட பொறுப்பைச் செய்யும் ஒரு மனிதராக... இப்படி இந்தச் சமூகத்தில் ஒருவரே பல பாத்திரங்களை ஏற்று நடிக்கும் குணச்சித்திர நடிகராக இருக்கிறார்.

இந்த எல்லாப் பாத்திரங்களையும் நிறைவாகச் செய்யும் ஒருவருக்கே வாழ்க்கையில் வெற்றி என்பது வாய்க்கிறது. அதுவே நிஜமான, நிறைவான வெற்றி. அந்த வெற்றியில் கிடைக்கும் மனநிறைவு எல்லையற்றது. வாழ்க்கை என்பது அதை நோக்கிய பயணமாகவே இருக்க வேண்டும்.



## நிஜமான வெற்றியின் வழி!

எல்லாரும் வெற்றியடைய விரும்புகிறார்கள்; யாரும் தோல்வியைச் சந்திக்க விரும்புவதில்லை. தோல்விகளின் பாதைவழியாகச் சென்றடைவதுதான் வெற்றி என்பதை அவர்கள் உணர்வதில்லை. இன்னும் பலருக்கு ‘எது நிஜமான வெற்றி’ என்பதே புரிவதில்லை.

வாழ்வின் நியதிகள் தெளிவானவை. ஒரு சிகரத்தைச் சென்றடைந்தவர், அங்கேயே இருக்க முடியாது அல்லவா? ஒரு பள்ளத்தில் சறுக்கி விழுந்தவர், அதிலிருந்து மீள்வதற்கான வழிகளை வேகமாக யோசிக்கத் தொடங்குவார் அல்லவா? வாழ்வில் எது வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் மாறும். அந்த மாற்றத்தைச் சர்வ சாதாரணமாக எதிர்கொள்ளப் பழகிவிட்டால் போதும். வெற்றிகளில் அளவுக்கு மீறிய ஆர்ப்பாட்டமும் செய்ய மாட்டோம். தோல்விகளில் நிலைகுலையவும் மாட்டோம்.

## வெற்றியைக் கண்டடைவோம்!

வாழ்க்கையின் இயல்பும் வெற்றியின் அர்த்தமும் புரிந்தவர்களுக்குச் சிரமங்கள் இல்லை. “எனக்கு எல்லாம் கொடு, நான் அப்போதுதான் வாழ்க்கையை அனுபவிக்க முடியும்” என்று ஒருவர் கடவுளிடம் கேட்டார். கடவுள் சிரித்தபடி, “உனக்கு வாழ்க்கையையே கொடுத்திருக்கிறேன். வாழ்க்கையில் எல்லாமே இருக்கிறதே!” என்றாராம்.

எல்லாமே இருக்கிற வாழ்க்கையைத் தொலைத்து விட்டு எங்கோ தேடினால் எதுவுமே கிடைக்காது. தேடவேண்டியதும் நாம்தான்; தேட வேண்டிய இடமும் நமக்குள்ளேதான்! அப்படித் தேடி நிஜமான வெற்றியைக் கண்டடையும்போது அடையும் பரவசம் தனித்துவமானது.



## பலவீனம் வெற்றியைத் தடுக்குமா?

பலரும் வாழ்வில் தங்களின் பலவீனங்களை நினைத்துக் கவலைப்படுகிறார்கள். அந்தக் கவலையைத் துரத்துங்கள். முகப்பரு, சட்டெனக் கலைந்து போகும் தலைமுடி, சரும நிறம், சரளமாக ஆங்கிலம் பேச வராதது என ஏதாவது ஒரு விஷயம் பலரையும் எப்போதும் சங்கடப்படுத்தும். இந்தச் சங்கடமே பலரையும் முன்வரிசைக்குச் செல்லவிடாமல் தடுக்கும். இந்த எல்லையை நீங்கள் தாண்ட வேண்டும். வெற்றியாளர்கள் யாருமே அவர்களின் தோற்றத்தால் அறியப்படுவதில்லை. அவர்களின் செயல்களாலேயே அறியப்படுகிறார்கள்.

யாருமே நூறு சதவிகிதம் கச்சிதமானவர்கள் கிடையாது. அபார சாதனையாளர்களிடம்கூடச் சில பலவீனங்கள் இருக்கும். அவர்கள் வெளியில் காட்ட மாட்டார்கள், அவ்வளவுதான்! வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நம் பலவீனங்கள் பல தவறுகளைச் செய்ய வைக்கும். அவற்றிலிருந்து விரைவில் மீண்டெழுங்கள். விழுந்தாலும் உடனடியாக எழத் தெரிந்தவர்களே வெற்றியாளர் ஆகிறார்கள்.



## வெற்றியின் அர்த்தம்!

வெற்றியைத் தேடும் பாதையில் எதையும் தொலைத்துவிடாமல் இருப்பது முக்கியம். விஞ்ஞானி ஒருவர், கூண்டில் எலி வளர்த்தார். அந்தக் கூண்டுக்குள் ஒரு மணியைப் பொருத்தினார். எலிக்குப் பசி எடுத்தால் கூண்டுக்குள் உள்ள மணியை அழுத்தப் பயிற்சி கொடுத்தார். பல மாதங்களுக்குப் பிறகு எலி இதற்குப் பழகிக்கொண்டது. பசி எடுத்தால் எலி மணியை அடிக்கும். விஞ்ஞானி உணவு கொண்டு வந்து தருவார். 'ஒரு எலியை இந்த அளவுக்குப் பழக்கி விட்டோமே' என்று அவருக்குத் தலைகால் புரியாத பெருமை.

சில நாட்களில் இன்னொரு எலியைப் பிடித்துவந்து அதே கூண்டில் விட்டார். இரண்டு எலிகளும் உடனே பேசிக்கொண்டன. "இந்த ஆள் எப்படி?" என்று புதிய எலி கேட்டது. அதற்குப் பழைய எலி, "ரொம்ப மோசம்! மணி அடிச்சதும் சாப்பாடு எடுத்துட்டு வர்ற மாதிரி இவனைப் பழக்குறதுக்குள்ளே நான் பட்ட பாடு இருக்கே... அப்பப்பா! இப்பதான் கொஞ்சம் கொஞ்சமா தேறிட்டு வர்றான்..." என்று சொன்னது. இதுபோன்ற அர்த்தமற்ற வெற்றிகளில் நிறைவடைந்துவிடாதீர்கள்!



## வெற்றியின் அர்த்தம் மாறும்!

வெற்றி என்பதன் அர்த்தம் ஒவ்வொரு பருவத்திலும் மாறும். 4 வயதுக் குழந்தையாக இருக்கும்போது, உடை அழுக்காகாமல் வாழ்வதே பெரிய வெற்றி. 8 வயதில், வெளியில் போய்விட்டுப்பத்திரமாகவீடுதிரும்புவதே பெரிய வெற்றி. 12 வயதுக்குள் நல்ல நண்பர்களை அடைவது வெற்றி. 17 வயதுக்குள் பள்ளிப் படிப்பை நல்ல மதிப்பெண்களோடு முடிப்பது வெற்றி. 21 வயதுக்குள் டிரைவிங் உள்பட எல்லா வாழ்க்கை விஷயங்களையும் கற்றுத் தேர்வதே வெற்றி. 25 வயதுக்குள் நல்ல வேலையில் அமர்வது வெற்றி. 30 வயதுக்குள் இனிய குடும்பம் அமைத்துக்கொள்வது வெற்றி. 35 வயதுக்குள் கணிசமாக சேமிப்பு வைத்திருப்பது வெற்றி. 40 வயதுக்குள் சொந்த வீடு வாங்குவது வெற்றி. 45 வயதில் இளமை மாறாத தோற்றத்தோடு இருப்பதே வெற்றி. 50 வயதுக்குள் பிள்ளைகளை நல்ல கல்வித் தகுதிகளோடு ஆளாக்குவது வெற்றி. 55 வயதில் எல்லா வேலைகளையும் இளமையில் செய்தது போலவே செய்ய முடிவது வெற்றி. 60 வயதில் ஓய்வுக்காலத்தை இனிமையாக ஆக்கிக்கொள்வது வெற்றி. 65 வயதில் நோய்கள் இல்லாமல் வாழ்வதே வெற்றி. 70 வயதில், யாருக்கும் சுமையாக இல்லாமல் இருக்க முடிவதே வெற்றி. 75 வயதில் இனிமையான நண்பர்களைப் பெற்று, அவர்களோடு வாழ முடிவது வெற்றி. 80 வயதில், வெளியில் போய்விட்டுப் பத்திரமாக வீடு திரும்புவதே பெரிய வெற்றி. 85 வயதில், உடையை அழுக்காக்காமல் வாழ்வதே பெரிய வெற்றி.

இப்படி வாழ்க்கை என்கிற வட்டம் மீண்டும் நண்பர்கள், வீடு திரும்புதல், உடை அழுக்கேறாமல் வாழ்தல் என அங்கேயே வந்துவிடுகிறது.




ஒரு பணக்காரச் சிறுவன் இருந்தான். ஒரே பையன் என்பதால் அம்மாவுக்கு அவன் மீது ரொம்பவே பிரியம். அதனால், அவன் எது கேட்டாலும் உடனே கிடைத்துவிடும். அவன் ஓவியங்கள் வரைவதில் ஆர்வம் காட்டியதால், பெரிய நோட்டுகள், வண்ணங்கள், பிரஷ், கிரேயான்கள் என்று எல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்தார் அம்மா. சில நாட்களில் அவனுக்கு ஓவியங்கள் மீது ஆர்வம் போய்விட்டது. “அம்மா, இந்த எதுவுமே எனக்கு வேண்டாம்” என்றான். உடனே அம்மா அவற்றைத் தூக்கிப் போய்க் குப்பையில் போட்டார்.

அடுத்த நாள் பள்ளியிருந்து வந்த பிறகு அவன் சோர்வாக இருந்தான். அம்மா அவனை ஆதரவாகக் கரம் பற்றியபடி, ‘‘என்ன ஆச்சு?’’ என்று கேட்டார். ‘‘என் அறையில் இருக்கும் வாசனையே எனக்குப் பிடிக்கவில்லை. இதனால் தலைவலிக்கிறது’’ என்று புகார் செய்தான். உடனே அம்மா பதறிப் போய் செயலில் இறங்கினார். அவன் அறையில் வாசம் பரப்புவதற்காக வைக்கப்பட்டிருந்த வாசனை எண்ணெய் பாட்டில்கள் அனைத்தையும் தூக்கிப் போய்க் குப்பையில் போட்டார். வெளிநாட்டிலிருந்து வாங்கிவந்த விலையுயர்ந்த வாசனை திரவியங்கள் என்றாலும், குப்பையில் போட அவர் கவலைப்படவில்லை.

ஒருநாள் அம்மாவும் மகனும் ஷாப்பிங் போனபோது, ஒரு பெரிய வணிக வளாகத்துக்கு அருகே இளைஞன் ஒருவன் மெழுகுவர்த்திகள் விற்பதைக் கவனித்தனர். அதுபோன்ற வண்ணங்களில் மெழுகுவர்த்தியை அவர்கள் அதற்குமுன் பார்த்ததில்லை. அத்தனை கவர்ச்சியான நிறங்களில் அவை கண்ணைப் பறித்தன. ‘சொர்க்கத்து நறுமணத்தை உங்கள் வீட்டுக்குத் தரும் மெழுகுவர்த்தி’ என்று அவன் கூவிக்கூவி விற்றுக்கொண்டிருந்தான். அங்கே ஒரு மெழுகுவர்த்தி எரிய, அதிலிருந்து வாசனை பரவி அந்தப் பகுதியையே மயக்கிக்கொண்டிருந்தது. நிறைய பேர் அந்த வாசனையால் ஈர்க்கப்பட்டு அவற்றை வாங்கியபடி இருந்தனர்.

சிறுவன் அதைப் பார்த்ததும் தன் அம்மாவிடம், “என் அறையில் எரியவைக்க அந்த மெழுகுவர்த்தி நிறைய வேண்டும்” என்று கேட்டான்.

அம்மா அந்த இளைஞனை நெருங்கி, “மெழுகுவர்த்தி என்ன விலை? எல்லா கலர்லயும் எங்களுக்கு எடுத்துக் கொடு” என்றார். இளைஞன் உடனே அந்த அம்மாவை வணங்கி, “மத்தவங்களுக்கு விற்பதில் பாதி விலையில் உங்களுக்குத் தருகிறேன் அம்மா. உங்கள் உதவியால்தான் இன்று நான் மெழுகுவர்த்தி வியாபாரியாக மாறி நன்றாகச் சம்பாதிக்கிறேன்” என்றான்.

அந்த அம்மா ஆச்சர்யமாகி, ‘‘அப்படியா? நான் உன்னைப் பார்த்ததுகூட இல்லையே” என்றார். இளைஞன் பணிவாக, “நான் உங்கள் வீடு இருக்கும் பகுதியில்தான் இருக்கிறேன்ம்மா. நீங்கள் ஒருநாள் நிறைய கலர் கிரேயான்களைக் குப்பைத்தொட்டியில் போட்டீர்கள். அவற்றை எடுத்துவந்தேன். அடுத்த நாள் நிறைய வாசனை எண்ணெய் பாட்டில்களையும் குப்பையில் போட்டீர்கள். அவற்றையும் பத்திரமாக எடுத்து வந்தேன். கொஞ்சம் மெழுகு வாங்கி, கிரேயான்களை உருக்கி அதில் கலந்து வண்ண மெழுகுவர்த்திகளை உருவாக்கினேன். நீங்கள் தூக்கிப் போட்ட வாசனை எண்ணெயைக் கலந்து நறுமணம் சேர்த்தேன். அப்படித்தான் இவை வந்தன” என்றான். அந்த அம்மா திகைத்தார்.

தேவையில்லை என்று குப்பையில் போட்ட பொருட்களே மதிப்பான பொருளாக மாற முடியும். எனவே, நிராகரிப்பை தோல்வியாகக் கருதாதீர்கள். எந்தப் பின்னடைவுக்குப் பிறகும் உங்களால் வெல்ல முடியும்!


Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


RAMRAJ
mithu
TOWELS
மென்மையின் அனுபவத்தை
உணருங்கள்.
ராம்ராஜ் மிருது டவலுடன்.
VARIETIES
Bamboo Towels | Terry Towels
Signature Towels
Striped & Chequered Towels
Shop Online at
www.ramrajcotton.in
Premium Cotton
High Absorption
Quick Drying
Super Soft
Non-Allergic to Skin
Range of Colours & Patterns

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2025-27. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-06-2025. Posted at Tirupur BPC on 5th of every month.

